# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஆகஸ்ட் 2000 ஜீவியம் 6 மலர் 4**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| *மனித சுபாவம்* | 2 |
| *இம்மாதச் செய்தி* | 9 |
| *லைப் டிவைன்* | 10 |
| *அன்பர் கடிதம்* | 18 |
| *அன்னை நமக்களிக்கும் வாழ்க்கை - வசந்தமானது, பசுமையானது, தென்றல் போன்றது நாம் காணும் வறட்சியும், வீசும் புயலும் - நமக்கேயுண்டானது* | 19 |
| *சிறு குறிப்புகள்* | 24 |
| *சாவித்ரி* | 26 |
| *அஜெண்டா* | 28 |
| *லைப் டிவைன் - கருத்து* | 30 |
| *பகவானுடைய இதர நூல்கள்* | 32 |
| *என்றும் எதிலும் வெற்றி பெறுவதற்கான வழிகள்* | 34 |
| *அன்பர் அனுபவம்* | 39 |
| *நம்பிக்கை* | 51 |
| *பிரார்த்தனை பலிக்க வேண்டும்* | 59 |


❊ ❊ ❊

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருட சந்தா ரூ.60/-**

# மனித சுபாவம் III

கர்மயோகி

**உன் தொழிலின் அடிப்படையே புரியாதவரில் நீ ஒருவனாக இருந்தால், நீ அதை உடனே கற்றுக் கொள்ள வேண்டும். அக்குறை உனக்கில்லை எனில் உன் தொழிலின் அம்சங்களை அடிப்படை விஷயங் களுடன் அடிக்கடி ஒத்துப் பார்.**

❊ ❊ ❊

**சமூகத்துடன் உனது ஆழ்ந்த தொடர்பு எங்குள்ளது எனப் பார்த்து, உன் செயல்களை அதன் கண்ணோட்டத்தில் செய்ய வேண்டும்.**

❊ ❊ ❊

சமூகத்தையும் மீறலாம். எல்லாச் சந்தப்பங்களிலும் மீற முடியாது. சாதாரண வாழ்வில் சமூகத்தை மீறும் நேரம் வருவதில்லை. முக்கியமான நேரத்தில் வரும். அதுபோன்ற முக்கியமான நேரத்தில் நாம் சமூகத்தை மீற முடியாமல் தடுத்தது எது என்று கண்டால், நமக்கும் சமூகத்திற்கும் உள்ள ஆழ்ந்த தொடர்பு தெரியும். வேலைக்காரி மகனைக் கெட்டிக்காரன் என்பதால் கல்லூரியில் சேர்க்க ஏற்பாடு செய்யும்பொழுது, வேலைக்காரியின் புருஷன் வேலை செய்யும் கம்பனி மானேஜர் அதைத் தடுக்கிறார். அவரை மீறி நாம் அவனைச் சேர்க்க முயன்றால், நாம் குடியிருக்கும் வீட்டுக்காரர் மூலம் மானேஜர் வந்து தடுக்கிறார். இல்லை என்றால் காலி செய்யச் சொல்கிறார், எனில் நம் சமூக அந்தஸ்து யாருக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்கிறது. அதைக் கொண்டு நாம் செயல் களை நிர்ணயிக்க வேண்டும் என்பது சாதாரண மனிதன் நிலை.



**வந்த வாய்ப்பு, வருவதும் போவதுமாக இருக்கிறது எனில், அதன் பின்னர் பெரியதொரு வாய்ப்புக் காத்திருக்கிறது என்று பொருள்.**

❊ ❊ ❊

பெரிய வாய்ப்பு பின்னணியில் இல்லாவிட்டால் வந்தது போன பின் திரும்பாது. பின்னணி பெரியதாக இருப்பதால்தான் வந்தது போக முடியாமல் தவிக்கிறது.

**எப்பொழுதாவது ஆதி மனிதனைவிடத் தாழ்வாக நீ நடந்து கொண்டிருக்கிறாயா? அது கவனிக்க வேண்டிய இடம்.**

❊ ❊ ❊

நம்முள் ஆதி மனிதன் முழுமையாக ஒளிந்து கொண்டிருக்கிறான் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். நாகரீகமானவர் களிடையே அவன் வெளிவருவதில்லை. வெளிவந்தால் மீண்டும் மீண்டும் வரச் சந்தர்ப்பமுண்டு.

வெட்கப்படக்கூடிய பேராசை, பசி, தாகம், இனவுணர்வைக் கட்டுப்படுத்த முடியாத செயல்கள், எதிரியை அழிக்கக் கொலையும் செய்யும் எண்ணம் மேலெழுவது போன்றவை பலர் வாழ்வில் தலை எடுக்கலாம். அப்படியிருந்தால் அதை ஆராய்ந்து இனி வெளி வர முடியாதபடிச் செய்தால் இன்றைய நிலையிலிருந்து எந்த உயரத்தையும் எட்டலாம்.

**உன் இலாபத்தை இரு மடங்காக்கும் முயற்சி, 5 அல்லது 10 அல்லது 50 மடங்கு பலித்தால், மனம் இடம் கொடுக்கும் இடத்தைச் சோதனை செய்து அதை எதிர்மாறாக மாற்றினால், பெரிய பலஹீனத்தைச் சிறப்பான வலிமையாக மாற்றினால், குழப்பத்தைத் தெளிவாக மாற்றினால், நீ எதையும் சாதிக்கலாம்.**

❊ ❊ ❊

இலாபத்தை இருமடங்காக்க முடியும் என நம்பமாட்டார்கள். முயன்றால் வெற்றி பெறுபவர்களுக்கு இருமடங்கு கிடைக்கும். ஏதோ ஒருவருக்கு 5, 10, 50 மடங்கு கிடைக்கும். அப்படி எனில், அவரிடம் புதைந்துள்ள திறமைகள் ஏராளம் என்று பொருள். இதைக் கண்டபின், குழப்பம், பலஹீனம், மாற வேண்டிய இடம் ஆகியவற்றைத் தெளிவு, வலிமை, மாறவேண்டியது என மாற்றுவது திருவுரு மாற்றத்திற்குரிய உபாயங்கள். ஜீவனின் அபாரத் திறமை புதைந்துள்ளபொழுது, ஓரிடத்தில் குழப்பம் இருப்பதால் அத்தனையும் பலன் தருவதில்லை. குழப்பத்தைத் தெளிவாக மாற்றினால் எதையும் சாதிக்கலாம். பலஹீனத்தை ஏற்பவர் குறைவு. மாற்றுபவர் அரிது. செய்தால் அளவு கடந்த பலன் உண்டு.

**உன் இளவயதை நினைத்துப் பார்த்து நீ பெருமைப்பட்ட இலட்சியங்களை ஆராய்ந்து பார். குடும்பம், கோயில், பள்ளி, கட்சி, கல்லூரி ஆகியவற்றில் கற்றுக்கொண்ட இலட்சியங்களை இன்று நீ முழுமையாகப் பின்பற்றவில்லை என்றால், இப்பொழுது பின்பற்றுவது பலன் தரும்.**

❉ ❉ ❉

அன்றைவிட இன்று தெளிவு அதிகமாக இருப்பதால், அன்று முடியாதது இன்று அபரிமிதமாக முடியும். கல்லூரியில் **Russel** ரஸ்ஸல் புத்தகம் படிக்க வாங்கியதை முடிக்கவில்லை என்றால், இன்று சிரமமில்லாமல் முடிக்கலாம். அதேபோல்தான் இலட்சியம், பண்பு, கொள்கைகள், கடமைகள், ஆசைகளும் ஆகும்.

நல்ல மனம் இருந்ததால் அன்று இலட்சியத்தை நாடினோம். பின்பற்ற முடியவில்லை. இன்று தெளிவும், திறனும் வந்துவிட்டதால் முடியும். பலன் அபரிமிதமாக இருக்கும்.

**ஆபீஸ் வேலையைப் புறக்கணித்துவிட்டு, சொந்த**



**வேலையைச் செய்யும் பழக்கமிருந்தால், அதை நிறுத்த வேண்டும். ஏனெனில் அதே பழக்கம் உன் காரியத்திலும் வரும். உனக்கு முக்கியமான வேலையை மறந்து, முக்கியமில்லாத வேலையை ஆசைக்காகச் செய்ய நேரும். அது வாழ்வை அழிக்கும்.**

❉ ❉ ❉

தவறு என்பதைச் செய்யக்கூடாது, நல்லதைச் செய்ய வேண்டும் என்பவருக்குக் குறை வாராது. இன்றைய சௌகரியம், கேட்க மாட் டார்கள் என்பதால் ஆதாயம், யாருக்கும் தெரியாது செய்யலாம், இவை யெல்லாம் பெரிய தப்பா என்றெல்லாம் தவற்றை நாடிப் போனால், அதற்குரியது பிறகு வரும் பொழுது அவஸ்தை பெரியதாக இருக்கும்.

பார்ட்னர் வருமானத்தை மாற்றிக் குறைத்து எழுத கணக்குப் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுத்தால், அவன் உன் வருமானத் தையும் அதே போல் செய்வான். பொய்க் கணக்கு, வரியை மறைப்பது, போன்றவற்றை வட நாட்டில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் கொள்கை யாகப் பின்பற்றினர். இவர்களில் சிலர் பிர்லா கம்பனிகளுக்கும் நிகராக வந்தனர். இவர்கள் புதிய மானேஜர், அக்கௌண்டண்ட் நியமித்தால், அவனைத் திருட அனுமதிப்பார்கள். அவன் திருடாவிட்டால் வேலையிலிருந்து எடுத்துவிடுவார்கள். அவர்கள் சொல்வது, 'திருடத் தெரியாதவனை நான் என்ன செய்வது, எனக்கு எப்படித் திருடித் தருவான்?' இக்கம்பனிகள் அனைத்தும் கொஞ்ச நாளில் தாமே மூடிக்கொண்டன. தவறு நீடிக்காது, நீடிக்க முடியாது.

**கெட்ட எண்ணத்தை நல்லெண்ணமாக மாற்ற முயல்வது அளவுகடந்த திறனைத் தரும்.**

❉ ❉ ❉

பூரண யோகத்தின் அடிப்படை திருவுருமாற்றம். இருள் ஒளியை விட அடர்ந்த ஒளியைத் தன்னுள் கொண்டது போன்ற

தத்துவங்களையுடையது பூரண யோகம். கெட்ட எண்ணத்தை விடுவது நல்லது. அன்னையைப் பின்பற்றுபவர் கெட்ட எண்ணத்தை நல்ல எண்ணமாக மாற்ற முயன்றால், அதன் விளைவாக அதனுள் மறைந்திருக்கும் அபரிமிதமான சக்தி வெளிவரும்.

கெட்ட எண்ணம் உள்ளவனுக்குச் சாதாரண மனிதனைவிடத் தீவிரம் ஏராளம். இவன் மனதை மாற்றிக் கொண்டு நல்ல எண்ணத்தை ஏற்றால் அதே தீவிரம் இருக்கும். எனவே தீவிர நல்லெண்ணம் உற்பத்தியாகும்.

**உனக்குச் சம்பந்தமில்லாத இடத்தில் திறமையிருந்தால், அதைப் பயன்படுத்தத் தயங்காதே.**

* * *

கம்பாசிட்டருக்கு எழுத்துத் திறமை, காவல்காரனுக்கு மெக்கானிக் திறமை, இருக்கும்பொழுது அதை வெளியில் சொல்ல வெட்கப்படுவார்கள். கம்பாசிட்டர் உலகை எட்டிப் பார்த்து, உயர்ந்த எழுத்தாளரானார். காவல்காரன், இன்ஜீனியர் திறமையுடையவன் என்பதைப் பயன்படுத்த வழியில்லாமலிருந்தபொழுது, சந்தர்ப்பம் அவனை மெஷின் உள்ள முதலாளியிடம் சேர்த்தது. காவலில் இவன் மாதம் ரூ. 100 சம்பாதித்த நாளில் முதலாளிக்குத் தினமும் 1000 ரூபாய் சம்பாதித்துக் கொடுத்தான். இவனுக்கு தினமும் 100 ரூபாய் வந்தது. நிலைமையைக் கருதாது, திறமையைக் கருதினால் அது என்றும் பலன் தரும்.

**உன் சமூக அந்தஸ்தில் பெருமையடைபவரானால், அதை விட்டுவிட்டால் பெரும் பலன் காத்திருக்கிறது.**

* * *

மிகப் பெரிய நிலச்சுவான்தார் மகன். தன் அந்தஸ்தை உலகம் போற்றும்பொழுது இவர் எப்படி அதைக் கருதாமலிருப்பார்? கருதியதன் பலன் இவரது 60ஆம் வயதில் ஊரில் எவருக்கும் இவரைத் தெரியாது. பழைய தலைமுறையினரே அறிவர். அவர்களும் கருதுவதில்லை என்ற நிலை ஏற்பட்டது. அவர் மகன் அதற்கும் இலாயக்கில்லாமல் வீட்டிலிருக்கிறான்.

இவர் தம் பெருமையைக் கருதாமல், திறமையைக் கருதியிருந்தால், ஜில்லாவில் முதன்மையாக வந்திருக்கலாம். அதைப் போல் திறமையைக் கருதியவர்கள் மாநிலத்தில் முதன்மையாக வந்தனர்.

**குமாஸ்தாவாக ஒரு பட்டதாரியும், கெஜட் பதவி ஆபீசராக மற்றொரு பட்டதாரியும், வாழ்க்கையை ஆரம்பித்தால் அது மலையும், மடுவும் ஆகும். ஆனால் அவை நெருங்கியும் வர முடியும்.**

* * *

குமாஸ்தாவாக இருக்கும் இடத்தைப் பொருத்து, திறமையையும் பொருத்து இரு நண்பர்கள் இதுபோல் ஆரம்பித்தவர்கள் ஒரே பதவியில் ஓய்வு பெற்றனர். பொதுவாக இவ்விதி உண்மையானாலும் திறமைக்கு விலக்குண்டு. இடத்தின் சிறப்புக்கு விதி விலகும்.

**சிறு வயதிலிருந்து பிறரிடம் உனக்குப் பிடிக்காதவற்றை எல்லாம் எழுதிப் பார். அத்தனையும் உன்னிடமிருக்கும். அவற்றை விலக்கினால் நல்லது.**

* * *

இது உளநூல் உண்மை. இதையறிந்தவர்கள் பிறரைக் குறை சொல்வதில்லை. பிறரைச் சொல்லும் குறை எல்லாம் நம்முடையது என அறிந்த பின் எப்படிக் குறை கூறுவது?

**உன் வாழ்வு, தொழிலுக்குரிய (facts) விவரங்களை ஆராய்ந்தால், 40 வருஷ அனுபவமுள்ளவர் பெற்ற விவரம் உன்னிடமிருக்கும். ஆராய்ச்சிக்கு அந்தப் பலன் உண்டு.**

❊ ❊ ❊

**இனிமையான பழக்கம், நல்ல பழக்கம், வெற்றிகரமான பழக்கங்களை நீ விரும்பிப் போற்றியிருந்தால், அவற்றை உன்னால் பெற முடியும் எனப் பொருள்.**

❊ ❊ ❊

**பிறருடைய பெரிய திறமைகளை நீ பாராட்டியிருந்தால் உன்னால் அவற்றைப் பெற முடியும்.**

முற்றும்.

❊ ❊ ❊

## ஜீவிய மணி

சுதந்திரத்தை இழக்கும் சுதந்திரமும் பெற்றவன் இறைவன்.



# இம்மாதச் செய்தி

**இடைவிடாத நினைவை மேற்கொண்டு உன் நினைவால் என் உள்ளத்தைப் புனிதப் படுத்த முனைந்தேன். உள்ளம் இடைவிடாமல் உன் நினைவை மேற்கொண்டது. நிறைவு ஏற்பட்டது. ஆனால் முழு நிறைவைக் காணோம். ஏன் என்று புரியவில்லை. சிந்தித்தேன். காலத்தைக் கடந்த உன்னைக் காலத்தினால் கட்டுண்ட நினைவால் நிறைவு படுத்த முடியாதோ என்று தோன்றியது. என்னை மறந்து தூங்கிவிட்டேன். கண் விழித்தபொழுது நான் நிறைவு பெற்றிருந்த விந்தையைக் கண்டேன்.**

❊ ❊ ❊

"ஸ்ரீ அரவிந்தம்"

# லைப் டிவைன்

கர்மயோகி

## VIII. The Methods of Vedantic Knowledge

*Page No: 65*
*Para No: 9*

Man has unenlightened parts.
Those are less articulate parts.
He is behind a veil.
His waking conscience is a narrow light.
His instruments are feeble.
They cannot assimilate the inner messages.
This is the nature of man.
Intuition has to act in these conditions.
Man's nature demands truth.
But it demands it in an ordered form.
The truth, for man, needs to be articulated.
Intuition is incapable of this.
Intuition is now not on the surface.
Nor is it organised there.
Neither does it possess the surface being.
It does not play a leading part on the surface.
Direct knowledge needs this completeness.

Given these, Intuition can deliver its message.
Intuition is not on the surface.



## 8. வேதாந்த ஞானம்

இருளான பகுதி மனிதனுக்குண்டு.
விவரமற்ற பகுதிகள் அவை.
மனிதனுக்கு முன் திரையுண்டு.
விழிப்பு, சிறிய ஒளி.
நம் கருவிகள் பலஹீனமானவை.
உள்ளிருந்து எழும் குரலை ஏற்கும் திறனற்றவை.
இதுவே மனித சுபாவம்.
இச்சூழ்நிலையில் நேரடி ஞானம் செயல்பட வேண்டும்.
மனிதனுக்குச் சத்தியம் தேவை.
விவரமான விளக்கமான மனிதன் அதை எதிர்பார்க்கின்றான்.
சொல்லின் விளக்கம் மனிதன் தேடுவது.
நேரடி ஞானம் இவற்றையறியாது.
மனித மேல் மனத்தில் நேரடி ஞானமில்லை.
அங்கு, தெளிவாகச் செயல்படும் நிலையிலுமில்லை.
மேல்மனம் அதன் ஆட்சியிலுமில்லை.
நேரடி ஞானம் மேல் மனத்தில் முக்கிய பங்கு வகிக்கவில்லை.
மனிதன் கடவுளை நேரடியாக அறிய மேல் மனம்
இத்தகுதிகளைப் பெற வேண்டும்.
இவையிருந்தால் நேரடி ஞானம் நமக்கு கடவுளை உணர்த்தும்.
நேரடி ஞானம் மேல் மனத்திலில்லை.

It is reason that rules there.
Reason is organised here.
It helps us.
Our perceptions are on the surface.
Thoughts are born there.
Actions originate here.
It is reason that orders all these.
Vedanta belongs to the intuitive age.
It was governed by the Upanishads.
Reason was born later.
It took over the next age.
Vedanta was inspired scripture.
Reason gave birth to metaphysics.
Metaphysics won the day.
Later came experimental Science.
Metaphysics lost its field to science.
Intuition is born in the superconscient.
It is a messenger from there.
Superconscient is our highest faculty.
Pure reason is a deputy of the superconscient.
It belongs to the middle heights of our being.
Reason supplanted Intuition.
Physical mind belongs to the lower elevations.
Senses go with it.
Together they belong to the plains.
They are confined to their experience.



பகுத்தறிவு அங்கு ஆட்சி செய்கிறது.
பகுத்தறிவு இங்கு தெளிவு பெற்றுள்ளது.
இது பேருதவி.
நம் அறிவதனைத்தும் மேல் மனத்தில்.
எண்ணங்கள் எழுவது அங்குதான்.
செயல்களுக்கும் அதுவே உற்பத்தி ஸ்தானம்.
இவற்றை எல்லாம் மேற்பார்வையிடுவது பகுத்தறிவு.
வேதாந்தம் ஞானம் பிறந்த காலத்திற்குரியது.
வேதாந்தம் என்பது உபநிஷதம்.
பகுத்தறிவு பிறகு பிறந்தது.
அடுத்த காலத்தை அறிவு ஆட்சி செய்தது.
வேதாந்தம் ஞானோதயத்தில் பிறந்தது.
அறிவு வந்து தத்துவத்தைக் கொண்டு வந்தது.
தத்துவம் வென்றது.
அடுத்தாற்போல் விஞ்ஞானம் வந்தது.
விஞ்ஞானம் தத்துவத்தை வென்றது.
நேரடி ஞானம் பரம்பொருளில் எழுகிறது.
பரம்பொருளின் தூதுவனாக வருகிறது அது.
பரம்பொருளே நமக்கு உச்சகட்டம்.
பகுத்தறிவு பரம்பொருளுக்குப் பிரதிநிதி போன்றது.
நம் ஜீவனின் மையத்திலுள்ளது பகுத்தறிவு.
அறிவு ஞானத்தை விரட்டியது.
ஜட மனம் தாழ்ந்த பகுதிக்குரியது.
அது புலனுக்குரியது.
இரண்டும் சம வெளியான தாழ்நிலத்திற்குரியவை.
இவை அனுபவத்தை ஏற்கின்றன.

They are bound by the aids we have invented.
Here reason has a mixed action.
In time, reason lost to science.
This process is a descent.
It is really a circle of progress.
The lower is compelled by the higher.
It has to assimilate the higher knowledge.
The lower has to re-establish the higher.
It has to do it in its own way.
The lower enlarges by this exercise.
It becomes supple.
It offers more ample self-accommodation.
Thus the higher enters the lower:
This is an attempt at separate assimilation.
These attempts are in succession.
This alternation is essential.
Without this, we would remain under exclusive domination.
A part of our nature would so dominate.
The rest would remain depressed
They would be unduly subjected.
The depressed part would remain separate in its field.
Thus, it would be poorly developed.

*Page No : 68*
*Para No : 14*

We see this in the Upanishads.
This succession is seen there.
It is there even after that.



இவை கண்டுபிடித்த கருவிகளை நம்பி வாழும் பழக்கமுடையவை.
பகுத்தறிவு இங்கு தூய்மையாகச் செயல்பட முடியாது.
காலப்போக்கில் விஞ்ஞானம் அறிவை வென்றது.
இது கீழ் நிலை.
ஆனால் இதிலும் ஏற்றமுண்டு.
தாழ்நிலை மேல் நிலைக்குட்பட்டது.
மேல்நிலை ஞானத்திலிருந்து கீழ்நிலை பெற வேண்டும்.
தாழ்நிலை உயர்ந்து ஞானத்தை ஏற்க வேண்டும்.
தனக்குரிய முறையில் அதைச் செய்ய வேண்டும்.
இதன் மூலம் சிறியது பெரியதாகிறது.
கடினமான சிறியது நெகிழ்ந்து உயர்கிறது.
தான் மலர ஆரம்பிக்கிறது.
உயர்ந்தது தாழ்ந்ததை ஆட்கொள்கிறது.
ஒவ்வோர் பகுதியும் முன்னேறும் முறை இது.
இவை ஒன்றன்பின் ஒன்றாய் வருகின்றன.
மாறிமாறி வருவது அவசியம்.
இல்லையெனில், நாம் ஓர் பகுதிக்கேயுட்பட்டிருப்போம்.
ஒரு பகுதியே ஆட்சி செய்யும்.
மற்றவை சுருங்கி அவதிப்படும்.
அவசியமில்லாமல் அவை சிரமப்படும்.
ஒடுக்கப்பட்டவை தம் நிலையில் ஒதுங்கியிருக்கும்.
அதனால், அவை வளரும் சந்தர்ப்பம் எழாது.

இந்நிலையை நாம் உபநிஷத்தில் காண்கிறோம்.
ஒன்றன் பின் ஒன்றாக வரும் நிலை அங்குள்ளது.
உபநிஷத காலம் கடந்தும் இந்நிலையைக் காண முடியும்.

Intuition ruled the Vedas and Vedanta.
They relied on spiritual experience.
Scholars speak of great debates.
It is an error.
They go by the name of discussion.
They are really not discussions.
Controversies rise by dialectics.
Logical reasoning raise them too.
They are not governed by logic.
What governs is intuition.
They finally compare experiences.
Here greater light prevails.
The narrower one is let down.
The faulty ones are side-stepped.
Comprehensiveness is accepted.
Perfection is appreciated.
The more essential is readily accepted.
One asks the other what he knew.
He does not ask what he thinks.
No one asks what his conclusions are.
Logical reasoning is absent in Vedanta.
Vedantic truths are not logically established.
Intuitions have been accepted by the sages.
Greater intuition prevailed over lesser ones.
No one resorted to logical reasoning.

Cond..



வேதமும் வேதாந்தமும் ஞானத்தைப் பெற்றவை.
ஆத்மானுபவத்தை அவர் ஏற்றனர்.
விவாதங்களைப் பண்டிதர் குறிக்கின்றனர்.
இது தவறு.
வாதம் என்ற சொல்லைக் கூறுகின்றனர்.
உண்மையில் அவை வாதங்களில்லை.
தர்க்கம் வாதமாகிறது.
பகுத்தறிவு, தர்க்கம் ஆகியவை அவற்றை எழுப்புகின்றன.
வேதாந்தம் தர்க்கத்திற்குட்பட்டதில்லை.
அது ஞானத்திற்குரியது.
முடிவாக ஆத்மானுபவம் பேசப்படுகிறது.
பெரிய அனுபவத்தை ஏற்கின்றனர்.
சிறியது புறக்கணிக்கப்படுகிறது.
தவறானவை ஒதுக்கப்படுகின்றன.
விசாலமான அனுபவம் ஏற்கப்படுகிறது.
சிறப்பைப் பாராட்டுகின்றனர்.
முக்கியமானதை உடனே ஒத்துக் கொள்கின்றனர்.
ரிஷி அடுத்தவரை உங்களுக்கென்ன தெரியும் என்று கேட்கிறார்.
நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்பதில்லை.
உங்கள் முடிவு என்ன என்று எவரும் சொல்வதில்லை.
வேதாந்தத்தில் தர்க்கம் காணப்படவில்லை.
தர்க்கரீதியாக வேதாந்தக் கருத்துகள் ஏற்படவில்லை.
ஞானம் ரிஷிகளால் ஏற்கப்படுகிறது.
பெரிய ஞானம் சிறிய ஞானத்தை வென்றது.
தர்க்கவாதம் அக்காலத்திலில்லை.

தொடரும்...

# “அன்பர் கடிதம்”

அன்புள்ள அன்னை அவர்களுக்கு பாதம் தொட்டு வணங்கிக் கொண்டு தாழ்மையாயும் பணிவன்போடு கூடி எழுதிக் கொள்கிறேன்.

என் கடைசி மகள் பத்மாவுடைய கணவர் குடும்பத்தில் கணவரோடு சேர்த்து 3 ஆண் சகோதரர்கள், 2 சகோதரிகள். இவர்களுக்கெல்லாம் பெண் குழந்தையே இல்லை. என் மகளுக்கும் முதல் பிள்ளை ஆண். இரண்டாவது உண்டாயிருந்தாள். அப்போது பெண் குழந்தையாகக் கிடைக்கவேண்டும் என்று என் மகளுக்கும் அவள் கணவர் குடும்பத்தில் எல்லோருக்கும் ஆசை.

என் மகளிடம் அன்னையை நினைத்துக் கொள். அன்னையை வணங்கி வேண்டினால் பெண் குழந்தையே தருவார் என்று சொல்லி அன்னையின் பிரசாதத்தையும் ஸ்ரீ அரவிந்தர் அன்னை படத்தையும் என் மகளிடம் கொடுத்து எப்போதும் இந்தப் பிரசாதத்தையும் படத்தையும் வைத்து மனதில் நினைத்துக் கொள் என்றேன், அவளும் அப்படியே செய்தாள்.

நாகர்கோவில் அன்னை ஸ்ரீ அரவிந்தர் தியான மையத்திற்குப் போயும், வீட்டில் படம் வைத்தும் அன்னைக்கும் ஸ்ரீ அரவிந்தருக்கும் புஷ்பம் வைத்து வணங்கியும் பெண் குழந்தை என் மகளுக்குக் கொடுங்கள் என்று அன்னையிடம் வணங்கிக் கேட்டுக்கொண்டேன். என் பிரார்த்தனையை அன்னை ஏற்றுகொண்டு அன்னையின் அருளால் 06.10.98 செவ்வாய்க்கிழமை இரவு 10.04க்கு என் மகளுக்கு எங்கள் எல்லோருடைய விருப்பப்படி பெண்குழந்தை பிறந்தது.

எல்லோருக்கும் சந்தோஷம். மிக்க மகிழ்ச்சி. எங்கள் பிரார்த்தனைப்படி அன்னை தந்தார். அன்னைக்கு எங்களுடைய நன்றியை வணக்கத்துடனும் தாழ்மையுடனும் பாதாரவிந்தம் வணங்கி இந்த கடிதத்தை எழுதிக்கொள்கிறேன். அன்னையின் அருள் பிரசாதத்தை அனுப்பும்படி, பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பிள்ளையை மீரா என்று அழைக்கிறேன்.

❊ ❊ ❊





## அன்னை நமக்களிக்கும் வாழ்க்கை வசந்தமானது, பசுமையானது, தென்றல் போன்றது

## நாம் காணும் வறட்சியும், வீசும் புயலும் - நமக்கேயுண்டானது

(சென்னை-பெரம்பூர் ரிஷி இல்லத் தியான மையத்தில் திருமதி உஷா ராம்தாஸ் ஏப்ரல் 30, 2000 அன்று நிகழ்த்திய உரை)

ஸ்ரீ அரவிந்தர் “நான் புதுவை வந்தபொழுது நகரம் மயானம் போன்றிருந்தது” என்றார். இன்று பாண்டியில் உள்ள அமைதி, சந்தோஷம், அலங்காரம், வளம் பொதுவாகப் பாண்டி போன்ற நகரங்களில் இல்லாதது. நேருவும், டாட்டாவும் அவற்றைக் கண்டுகொண்டனர். புதுவை மக்கள் அன்று ஸ்ரீ அரவிந்தரையோ, அன்னையையோ உளமார ஏற்கவில்லை. வெறுத்து ஒதுக்கினார்கள். இந்நிலையில் ஏற்பட்ட மாறுதல் புதுவைக்கு சிறப்பானது.

கிராமத்திலிருந்து கல்லூரிக்குப் போய் ஹாஸ்டலில் தங்கிய மாணவன், வேலையில்லாமலிருந்தவன் நல்ல வேலை பெறுதல், US வேலை கிடைத்துப்போவது, சந்தோஷமாகத் திருமணமான பெண் திருமணத்திற்கு முன்னும், பின்னும் கண்ட மாறுதல், கிராமிய வாழ்வைவிட்டு நகரத்தில் வந்து தங்கிய குடும்பங்களில் காணும் மாறுதல் போன்ற மாறுதல் அன்பர்கள் அன்னையை ஏற்றுக்கொண்டவுடன் ஏற்படுகிறது. குருடனுக்கும் தெரியும் வகையில் ஏற்படுபவை அவை. வருஷம் ஒரு பஸ் ரூட் ஒரு குடும்பம் அதுபோல் வாங்கியது நான் அடிக்கடிக் குறிப்பிடுவது.

* *வாழ்வில் உள்ளதை எப்படிக் காப்பாற்றுவது என்பது பிரச்சினை. அன்னை வாழ்வில் எப்படி அடுத்த கட்டத்திற்கு முன்னேறலாம் என்பது பிரச்சினை.*

* நம்மை எப்படிக் காப்பாற்றிக் கொள்ளலாம் என நினைக்கும் மனிதன் அன்னையிடம் வந்தபின் எந்தவிதமாக நான் அடுத்தவர்க்குச் சேவை செய்யலாம் என்ற நிலைக்கு வருகிறான்.
* எந்தத் தொழில் செய்தாலும், எப்படி என் தொழிலில் நான் திறமையடையலாம் என்பவர் அன்பரானபின், எப்படி இத்தொழிலை முன்னேற்ற நான் கருவியாக இருக்கலாம் என்று மாறுகிறார்.
* நாமறிந்த மனநிலையை எப்படி வெளிப்படுத்துவது என்பது நம் கொள்கை. நம் மனநிலையை எப்படி உயர்ந்த மனநிலையாக்கு வது என்பது அன்னைச் சூழல்.
* நம்மிடம் வேலை செய்பவரை எப்படி நிர்வாகம் செய்வது என்பது அனைவருக்கும் உள்ளது. இன்று வீட்டு வேலை, கம்பனி வேலை செய்பவரை எப்படி நம்போல் உயர்த்துவது என்பது அன்பருடைய வாய்ப்பு. அன்பர்களுடைய வீடு, ஸ்தாபனத்தில் உள்ளவர் அதுபோன்ற மாறுதலை இயல்பாகப் பெறுவதை நாம் அறிவோம்.
* ஒவ்வொரு நிமிஷமும் நாம் அன்னையை நோக்கி ஒரு படி நெருங்கி வருதல் என இம்மனநிலையை அன்னை விவரிக்கின்றார்.
* ஒரு பாக்டரி ஏற்பட்டால் சுற்றுவட்டாரம் அதனால் செழிப்படைவதைப்போல் ஓர் அன்பரின் சூழலில் உள்ளவர் அனைவரும் வளம் பெறுகிறார்கள்.

விவசாயம் வந்த பொழுது நாடோடியாய் அலைந்த மனிதன் ஊர், உறவினர் என மாறி, ஊரும், தெருவும், குடும்பமும், கோவிலும், வளமும், உத்சவமும் பெற்றான். மனிதகுலம் செழிப்பு என்ற அரங்கத்தில் அடி எடுத்து வைத்தது. வியாபாரம் என்று ஏற்பட்டபின் நகரம் ஏற்பட்டு, அதன் சிறப்பும் செழிப்பும் பரவியது. தொழில் (**industry**) அதன் பிறகு வந்தது. அவை நகரங்களைப் பெருநகரமாக்கின.



நாட்டில் செல்வத்தை அளவு கடந்து பெருக்க முயன்று வெற்றி பெற்றன. அதைத் தொடர்ந்து பல்கலைக்கழகங்களும், மதவழிபாடும், **technology** தொழில்சிறப்புகளும் மலிந்து 20ஆம் நூற்றாண்டை உலகெங்கும் உருவாக்கின.

உலகில் பல நாடுகளில் வறுமை அழிந்தது. நோய் பெரும்பாலும் மறைந்தது. அறியாமை அறவே அகன்றது. ஆசியாவில் அதுபோன்ற பெருமாறுதல் ஏற்படவில்லை. ஆனால் மனத்தைப் பொருத்தவரை உலகம் குறுகியதாகவே இன்றுவரை உள்ளது.

அன்னை வந்தார். ஸ்ரீ அரவிந்தர் அவதரித்தார். மனத்தின் சிறுமைக்கு முடிவு காலம் எழுந்தது. அவர்கள் யோகம் பலித்து சத்தியஜீவியம் உலகுக்கு வந்துள்ளது.

* உலகில் மரணம் அழியவேண்டும் என்று எவரும் இதுவரை நினைக்கமுடியவில்லை. மரணம் அழியும் என்ற இலட்சியத்தை ஏற்றால், அதை நிறைவேற்றும் சக்தி புவியில் இன்று உண்டு.
* நோயழிய செய்த பெருமுயற்சிகள் பெரும் வெற்றியை அளித்துள்ளன. நோயின் மூலத்தை அழிக்கும் ஞானத்தை அன்னை நமக்களித்துள்ளார்.
* துன்பம் அழியப் பாடுபடாதவரில்லை. மிகப் பெரிய அளவில் துன்பம் குறைந்துள்ளது. மேலும் கொடுமையின் உருவம் மாறியுள்ளது. கொடுமைக்கு ஆளானவர் விடுதலையடைந்து வருகிறார்கள். ஆனால் கொடுமையழியவில்லை. அன்று கொடுமைக்கு உட்பட்டவர் இன்று கொடுமை செய்கின்றனர்.
* அறியாமை உலகில் பாதியளவில் இல்லை. மற்ற இடங்களில் அறியாமை அழியும் வழியை மக்கள் அறிந்துள்ளனர். உலகம் 100 ஆண்டில் அழிக்கும் அறியாமையைச் சில ஆண்டுகளில் அழிக்க அன்னை முன் வந்துள்ளார்.

* 50 நாடுகளில் வறுமை அழிந்து, செல்வம் அபரிமிதமாகப் பெருகியுள்ளது. மற்ற நாடுகளில் 50 ஆண்டுகளில் பெருக்கும் செல்வத்தை 5 ஆண்டுகளில் பெருக்கும் சக்தி அன்னையினுடையது.

* சிறுமை எல்லா நாடுகளிலும் உள்ளது. செல்வமும், அறிவும், ஆரோக்கியமும் பெருகிய அளவில் சிறுமை குறைந்துள்ளது. சிறுமை பெருமையாகும் ஆன்மீகச் சக்தியை திருவுருமாற்றக் கருவியாக அன்னை நமக்களிக்கிறார்.

* செல்வமும், கல்வியும், ஆரோக்கியமும் உலகில் சந்தோஷத்தைப் பெருக்கியுள்ளன, அவற்றிற்கு அப்பாற்பட்ட சந்தோஷத்தை அன்னை நமக்கு வழங்குகிறார்.

அன்னையின் இலட்சியம் சத்திய ஜீவன், அவரது சக்தி சத்திய ஜீவிய சக்தி. இன்றுவரை - அன்னை வரும்வரை - அது உலகில் இல்லாதது. அதுவரை நாம் பெற்றிருந்தது, உடலுழைப்பால் வரும் சக்தி, உணர்வாலும், அறிவாலும், ஆன்ம விழிப்பாலும், எழும் சக்தி. அவற்றை நாம் ஜனநாயகத்தின் மூலமும், டெக்னாலஜி மூலமும், விஞ்ஞான மூலமும், கல்வி மூலமும், வளரும் நாகரீகம் மூலமும் இன்று வாழ்க்கை வசதிகளாகப் பெற்றுள்ளோம்.

உடல் கடைசி நிலையிலுள்ளது. உணர்வு அதற்கடுத்தது. அறிவு மூன்றாம் நிலைக்குரியது. ஆன்மா அடுத்தது. மௌனத்தாலும், திருஷ்டியாலும், ஞானத்தாலும், தெய்வத்தாலும் ஆன்மீகச் சக்தியை இதுவரை உலகம் பெற்றது. இவற்றிற்கு அடுத்த நிலையிலுள்ளது சத்தியஜீவியம். அன்னை சத்திய ஜீவியத்திற்கு அடுத்த நிலை. அவரைக்கடந்த நிலை ஈஸ்வரன். அதற்கு மேலுள்ள சத், பிரம்மம் என்ற நிலைகளை நாம் அறியலாம், அன்னை தம் சக்தியை அவருக்குக் கீழுள்ள நிலைகள் எதன் மூலமும் அளிக்க முன்வருகிறார். படிக்கும் மாணவன் அன்னையை அழைத்தால் அறிவு மூலம் அன்னை சத்தியஜீவியத்திற்கு அடுத்த நிலையிலுள்ள தம் சக்தியை அவனுக்களிக்கிறார். அன்னை சக்தி மனத்தின் மூலம்



செயல்படும்பொழுது உச்சகட்டப் பலனைத் தந்து மாணவனுக்கு முதல் மார்க் தரும் காரணம் அன்னை சக்தி 4 நிலைகளிலுள்ள ஆன்மீகச் சக்திகளையும், அவற்றைக் கடந்த சத்திய ஜீவிய சக்தியையும் கடந்தது என்பதால்தான்.

உடலால் உழைப்பவன் அன்னையை அழைத்தால், பல சமயங்களில் அறிவால் உழைப்பவனுக்குக் கிடைப்பதைவிட அதிகமாகக் கிடைப்பது இந்த அமைப்பால். ஏன் அன்னை சக்தி வசந்தமானது, பசுமையானது, தென்றல் போன்றது எனில் அது எல்லாச் சக்திகளையும் கடந்தது என்பது மட்டுமில்லாமல், நாம் எந்த நிலையிலிருந்தாலும், அது நம்மை நோக்கி வரும் தன்மையுடையது.

உச்சக்கட்டத்திலிருந்து வந்தாலும், நாம் பெறும்பலன் நம் நிலையைப் பொருத்ததேயாகும். 5ஆம் வகுப்பு மாணவனுக்கு **Ph.D** படித்தவர் பாடம் போதிக்க முன்வந்தாலும், ஐன்ஸ்டீன் போன்ற மேதையே அக்கடமையை ஏற்றாலும், மாணவன் பெறும்பலன் அவன் வயதிற்கும், அவன் பாடபுத்தகத்திற்கும் உரியதாகும். அதுபோல் அன்னை நம்மை நோக்கி வந்தாலும் நாம் பெறுவது நம்மைப் பொருத்ததே. 5ஆம் வகுப்பு மாணவன் ஆசிரியர் **genius** மேதை என்பதை அறிந்து அவரால் அதிகபட்சப் பலனடைய விரும்பினால், அவன் ஒவ்வொரு வருஷமாகப் பள்ளியில் படிக்கத் தேவையில்லை. அவனுடைய ஞானம் அவனைக் குறுகிய காலத்தில் அடைய அவன் அவரை ஏற்க வேண்டும், அவர் மேதாவிலாசத்தை அறிந்து ஏற்கவேண்டும். அப்படி ஏற்றால் அவன் பள்ளியை விட்டு விலக வேண்டிவரும். நேரடியாக ஞானம் பெறமுடியும்.

❈ ❈ ❈

'சிறு குறிப்புகள்'

**Encyclopaedia Britannica**

# கலைக்களஞ்சியம்

சுமார் 30 வால்யூம்களில் 40,000 பக்கமுள்ள நூல். இதன் விலை சுமார் 30,000ரூபாய். நம் நாட்டில் இது அதிகமாக விற்பனை யாவதில்லை. வருஷத்தில் சென்னை ஆபீஸ் 150 செட் விற்கிறது. மேல் நாடுகளில் இந்த செட் இல்லாத வீடிருக்காது, பள்ளி மாணவர்கள் என்ஸைக்குளோபீடியா இல்லாமல் வீட்டுப் பாடம் எழுதமுடியாது. சிறுவர்கட்கு என எளிமையான மொழியில் தனிப் பிரசுரம் உண்டு. குழந்தைகட்கானதும் உண்டு.

நம் நாட்டில் இந்த செட் லைப்ரரிகளில் தானிருக்கும். எடுத்துப் பார்ப்பவர்கள் குறைவு. வீடுகளில் இருக்காது. இருந்தால் பயன்படுத்துவது குறைவு, இல்லை எனலாம். கம்ப்யூட்டரும், இன்டர்நெட்டும் வந்தபிறகு ரயிலால் பிரயாணம் மாறியது போன்ற நிலை. ரயில் வருமுன் நடந்து போகலாம் அல்லது வண்டியில் போகலாம், ரயில் வந்தபிறகு பிரயாணம் வெகுவாக மாறியது. பஸ்ஸும், விமானமும், கப்பலும் மேலும் மாற்றத்தைக் கொண்டுவந்தன.

**Rs**. 30,000க்கு விற்ற என்ஸைக்குளோபீடியா கம்ப்யூட்டர் வந்தபின் ரூ6000/-க்கு டிஸ்க்கில் வெளிவந்தது. பின் விலை தொடர்ந்து குறைந்தது. ரூ. 2000/-ம் ஆயிற்று. இன்டர்நெட் வந்தபின் என்ஸைக்குளோபீடியா புத்தகமாக வெளிவருவதை நிறுத்தியது. அடுத்தாற் போல் டிஸ்க்காக விற்பதையும் நிறுத்திவிட்டு இன்டர்நெட்டில் இலவசமாக எவரும் பெறலாம் என்று அறிவித்தது.

அடுத்த நாள் 1 கோடியே 20 லட்சம் பேர் இன்டர்நெட்டில் என்ஸைக்குளோபீடியாவைத் தேடி வந்து படித்தனர்.



பகவான் ஸ்ரீ அரவிந்தரை அன்னை சூட்சும உலகில் சந்தித்த பொழுது 1967 முதல் உலக அரசுகள் சத்தியஜீவியத்தால் ஆட்கொள்ளப்பட்டுள்ளனர் என்று கூறினார். எதிர்காலம் எப்படியிருக்கும்? 1 கோடிக்கு மேற்பட்டவர் 1 நாளில் கலைக் களஞ்சியத்தை நாடிவந்தனர் என்றால் அறிவுத் தாகத்தின் அளவு தெரிகிறது. சத்தியஜீவிய சக்தி வெளிப்படுவதாக நமக்கு நினைக்கத் தோன்றுகிறது.

* பட்டங்கள் எடுக்க, பட்டப்படிப்பை மேற்கொள்ள இன்டர்நெட் பயன்படுகிறது.
* முதல்வகுப்பு முதல் B.A., M.A., Ph.D வரை இன்டர்நெட்டில் படித்து பட்டம் பெற முடியும் என்ற நிலை இன்றுண்டு.
* அமெரிக்கப் பல்கலைக்கழக வகுப்பறையில் உட்கார்ந்து படிப்பது போல் படிக்கும் வசதியும் உண்டு.
* உலகப் பெரு நூலகங்களில் உள்ள நூல்களை இன்டர்நெட்டில் எடுத்துப் படிக்கமுடியும்.
* எதிர்காலத்தில் பல்கலைக்கழங்கள் செய்யும் வேலையை இன்டர்நெட் செய்யும்.

படிப்பைப் பொறுத்தவரை **finite** சிறியது என்ற நிலை மாறி பெரியது **infinite** என்பது வந்துவிட்டது, **This is practical concept of infinity in education.**

❋ ❋ ❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அருள், உன்னை வலிய திருவுருமாற்ற முயன்றால், திரும்பத்திரும்ப கசப்பானவற்றின் மூலமே உன்னை நாடும்.

## P.8. Yet only has outward self suffered and above

## மேல் மனம் மட்டுமே வாடி வதங்கியது

ஸ்ரீ அரவிந்தர் துன்பத்தைப் புதிய கோணத்தில் விளக்குகிறார். துன்பம் என நாமறிவது இன்பமே. ஆழ்மனம் விரும்பி நாடும் இன்பத்தை மேல் மனம் துன்பம் என்கிறது என்பது பகவான் விளக்கம்.

* உடலை நோயினின்று குணப்படுத்த நாமே விரும்பி மருந்துண்டாலும் அது கசக்கிறது
* பல நூறு மைல் கடந்து வந்து மலை ஏறினாலும் கால் அளவுகடந்து வலிக்கிறது.
* வசதியற்ற பெற்றோர் பெரிய படிப்பில் மக்குப் பையனை விரும்பி, சிரமப்பட்டுச் சேர்த்து விட்டபின் படிக்க அவன் படும்பாடு பெரியது, பணமனுப்ப அவர் படும் பாடு அதனினும் பெரியது.

இது போன்ற நிகழ்ச்சிகளை நாமறிவோம். இவை நம் அனுபவத்திற்குட்பட்டவை. போன ஜென்மத்தில் அரசனாய் பிறந்தவன், அடுத்த ஜென்மத்தில் ஆண்டியாகப் பிறக்க ஆசைப்பட்டு பிறந்திருக்கிறான் எனில் அது ஆண்டிக்கும் புரிவதில்லை, அவனைக் காணும் நமக்கும் புரிவதில்லை.

3 வருஷமாகத் தோற்பதே வழக்கம், தோற்று இழந்த செல்வம் அதிகம் என்பவர் மீண்டும் சீட்டாட ஆசையாக வருகிறார் என்பதை நாம் கண்ணால் பார்க்கிறோம், நம்பமுடியவில்லை. அவர் தோற்க ஆசைப்படுகிறார், தோற்பதில் இன்பம் காண்கிறார் என்ற ஆன்மீக விளக்கம் அறிவுக்குப் புலப்படுவதில்லை.

ஸ்ரீ அரவிந்தம் என நாமறியும் தத்துவத்தின் முக்கிய அடிப்படைகளில் இது ஒன்று. இக்கருத்தை "சாவித்ரி" வாயிலாக நாம் இங்குப் பல கோணங்களிலும் காண்கிறோம்.



சத்தியவானைப்பற்றிய உண்மையை சாவித்திரி அறிவாள். அறிந்தும் அவள் நிலை குலையவில்லை. அவள் மனநிலையை விளக்கும் பகுதிகள் இவை.

* ஜீவனின் துள்ளலிலிருந்து ஒதுங்கிய சாவித்திரி
* அன்பிற்குரியவரிடமிருந்தே மறைந்து நிற்கும் மாது
* தெய்வத்தை உயர்த்தும் மனித கர்மம்
* அனைவருக்கும் மகுடம் அவளே
* தம் விதியையும் அறியாதவரின் பாரத்தை சுமப்பவள்
* எதிரியின் வலிமைக்கு தம் இதயத்தால் ஜீவனளிப்பவள்
* உதவியை நாடி அவளுள்ளிருந்து அழைப்பு எழவில்லை
* வாய் திறக்கவில்லை, அழுகை வரவில்லை
* எவருமறியாதது அவள் இரகஸ்யம்
* தைரியமளித்த அமைதி பொலியும் முகம்
* தனித்து நின்று உலகை உட்கொண்டவள்

❋ ❋ ❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தெய்வத்தின் கருவியாக இறைவன் மனிதனைச் சிருஷ்டித்தான், ஆனால் அகந்தை அவனை அவனுடைய கருவியாக்கிற்று. மனிதனை மீண்டும் இறைவனின் கருவியாக்க, யோகம் சமர்ப்பணத்தை நாடுகிறது.

## Vol III P. 92. Sri Aurobindo & The Mother did things that were considered dangerous but they were not dangerous to them

## ஆபத்து என்பதை அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் செய்தனர். அவர்கட்கு அது ஆபத்தாக இல்லை.

ஒரு குருவினுடைய நேர் பார்வையில்லாமல் செய்யும் யோகம் ஆபத்து. புதிய யோகத்தைக் கண்டுபிடிப்பவருக்கு குரு இல்லை என்பதால் அந்த ஆபத்து தவிர்க்க முடியாதது. ஸ்ரீ அரவிந்தர் அந்த ஆபத்தை அனுபவித்தார், அன்னை அவரைப் பின்பற்றினார்.

* மனித வாழ்வில் அடிக்கடி ஆபத்து வரும்.
* வசதியும், செல்வாக்கும், அதிர்ஷ்டமுமிருந்தால் ஆபத்து வாராது. வந்தால் விலகும்.
* எந்த ஆபத்தும் வாராத வாழ்வை மனிதன் “நிம்மதியான” வாழ்வு என விரும்புகிறான்.
* வாழ்விலும் முன்னேறுபவன் வாழ்வில் ஆபத்து ஏராளமாக வருவது உண்மை.
* ஆபத்தைச் சமாளிக்க முடியாவிட்டால் மனிதன் அழிவது நிச்சயம்.
* ஆபத்தை சமாளித்தால் விலகும்.
* அதிர்ஷ்டமிருந்தால் ஆபத்து வாய்ப்பாகிறது
* யோகம் என்பது ஆபத்தை அதிர்ஷ்டமாகக் கருதி வரவேற்பதாகும்.
* ஸ்ரீ அரவிந்தம் புது யோகமானதால் இவர் ஆபத்தை நாடிப் போக வேண்டியிருந்தது.
* எல்லா யோக ஆபத்தையும் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் அனுபவித்தனர்.
* எல்லா ஆபத்துகளும், அவர்கட்கு வாய்ப்பாக மாறின.
* அவர்கள் பெற்ற வாய்ப்புகள் மனிதகுலத்துக்கு மட்டுமல்ல



புவிக்கேயுரிய வாய்ப்பாக மாறின.

* ஆபத்தைக் கடந்து, அதை வாய்ப்பாக அவர்கள் மாற்றியதன் யோகப் பலனை நமக்கு அன்னை அருளாகக் கொடுக்கின்றார்.
* வாழ்வில் ஆபத்தை வாய்ப்பாக மாற்றும் மனப்பான்மையும், தைரியமும் உள்ளவர்க்கு அவ்வருள் உண்டு.
* அந்த அருள் மனிதனுக்கு அதிர்ஷ்டமாகவும், பக்தனுக்கு அன்னை அதிர்ஷ்டமாகவும் மாறுகிறது.
* குந்தளினி எழுந்தால் யோகி மோட்சமடைவார். அதன்பின் அதிகநாள் உயிருடனிருக்க மாட்டார்கள். அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் குந்தளினியை எழுப்பினர். அதன்பின் நெடுநாள் வாழ்ந்தனர்.
* இருவரும் தலை உச்சி மூலம் மூச்சு விட்டனர்! அதுவே அவர்களின் பிராணாயாமம்.
* வாழ்வுக்குரிய ஆபத்தும் அவர்கட்கு நிகழ்ந்தது. 5 முறை ஸ்ரீ அரவிந்தரைத் தூக்கிச் செல்ல முயன்றனர். அன்னை கழுத்தை அவர் கணவர் நெறித்தார்.
* இறைவன் பாம்பின் விஷப்பற்களை அன்னை முன் கொண்டு வந்தார். அன்னை உடல் நடுங்கியது. கேலி என்றார் இறைவன்.
* தியான் என்ற குரு அன்னை உயிரை சூட்சுமத்தில் துண்டித்தார். தானே மனம் மாறி மீண்டும் கொடுத்தார்.
* சாதகர்கள் இஷ்டப்படி தங்கள் வாழ்வை மாற்றியதால் இருவரும் சாதகர்களுடைய தான்தோன்றித்தனமான போக்கால், சொல்லொணாத் தொந்தரவுகளையும், ஆபத்துகளையும் அனுபவித்தனர்.
* தங்களை நாடி வந்தவர்கள், ஏற்றவர்கள், சிஷ்யர்களுடைய துரோகத்தால் ஸ்ரீ அரவிந்தர் உலகைவிட்டுப் போனதாக அன்னை எழுதியுள்ளார்.

❋ ❋ ❋

"லைப் டிவைன்- கருத்து''

**P. 50**

**All totality is a reversion to harmony and a reconciliation of the opposites**

## முழுமை சுமுகத்திற்குரியது. எதிரான வாதத்தின் நியாயத்தை அறிவதாகும்.

குடும்பத்தில் அவரவர் தம்தம் ஆதாயத்தைக் கருதுவது சுயநலம். அதுபோன்ற குடும்பங்கள் நாளடைவில் உடைந்து பிரியும். வசதி குறையும். விவசாயக் குடும்பமானால் நிலம் சிறுசிறு துண்டுகளாகும். அடுத்த தலைமுறையில் சிறு விவசாயி, விவசாயக் கூலியாவான். வியாபாரம் செய்யும் குடும்பம் குடும்பத்தைப் பாராட்டினால் வியாபாரம் பெருகும். சிறு தொழில் பெரியதாகும். குடும்பத்தில் சுமுகம் வளரும். எதிரியின் நியாயத்தை ஏற்கும் மனம் பண்புள்ளதாகும், சுயநலம் வளராது.

ஸ்தாபனத்தில் தம் சௌகரியத்தைக் கருதுபவர் மட்டுமிருந்தால் ஸ்தாபனம் வளராது. பிணக்கு வளரும்.

முழுமையான இறைவன் பகுதிகளிலான உலகைச் சிருஷ்டித்தான். பகுதி தன்னை வலியுறுத்தினால் மீண்டும் முழுமையை அடையமுடியாது. சுமுகமும், முழுமையும் மீண்டும் இறைவனையடைய உதவும் என்பது **Life Divine** இல் முக்கிய கருத்து.

1947 இல் காங்கிரஸ், முஸ்லீம் லீக் சுமுகத்தை நாடாததால் நாடு இரண்டாயிற்று. பின்னர் இரண்டு மூன்றாயிற்று. பிணக்கு வளர்ந்தால் ஆங்கிலேயரும், முஸ்லீம்களும் வருமுன் இருந்த நிலையான 56 தேசமாக மாறும்.

உலகம் **globalisation** ஒன்றாக முனையும் நேரம், நாடும், ஸ்தாபனமும், வீடும் முழுமையை நாடுவது நல்லது. அது நடைபெற மனிதன் தன்னை ஆராய வேண்டும். தன் ஜீவனின் 4 பகுதிகளில்



ஒன்றான ஆன்மாவை மற்றதினின்று பிரித்து ஆன்மாவுக்கு மோட்சம் தேடும் பாதை நாட்டுக்கோ, தனிமனிதனுக்கோ இறைவன் வகுத்த பாதையில்லை என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.

உடல், உணர்வு, மனம், ஆன்மா நான்கும் இணைவதே பூரண யோகம். அவை எந்த மனிதனில் ஒன்று சேருகிறதோ அவனே நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்துவான். அவனே **global citizen** உலகத்திற்குரிய குடிமகனாவான்.

வறுமையிலுள்ள குடும்பம் பிணக்கை விலக்கி, முழுமையை நாடினால், குடும்ப நலனை நாடினால் வறுமையிலிருந்து விடுபடும் என்பது இதன் மூலம் நாமறிவதாகும்.

நஷ்டமாகும் கம்பனி இலாபம் பெற ஒவ்வொரு பகுதியும் அடுத்த பகுதியுடன் இணைந்து செயல்படுவது முறையாகும்.

* முழுமையை நாடினால் சுமுகமும்,
* சுமுகத்தைத் தேடினால் வளமும்,
* வளம் பெற்றால் தெளிவும்,
* தெளிவு பெறுவதால் ஆன்மவிளக்கமும்,
* ஆன்ம விளக்கம் ஏற்படுவதால் ஜீவன் பூரணம் பெறுவதும்,
* பூரணயோகப் பாதைகளாகவும், இலட்சியங்களாகவுமிருப்பதை பகவான் ஸ்ரீ அரவிந்தர் அடிப்படையாக்கி, நிர்வாணம், துறவறம், மாயை என்ற கருத்துகளை, பூரணம், முழுமை, சத்தியம் என மாற்றி அமைக்கிறார்.

❊ ❊ ❊

## From Essays on the Gita

# கீதைப் பேருரைகளிலிருந்து எடுத்தவை

1) பிரம்மத்தை மனித மனம் இதுவரை அறிந்ததில்லை.

2) சாப்பிடும்பொழுது நாம் பொருள்களின் ருசியை அறிகிறோம். மாம்பழம் இனிப்பாக இருக்கிறது. பாகற்காய் கசக்கிறது என நாம் ருசியை உணர்கிறோம். ஆன்மவிழிப்பேற்றபின் இனிப்பு, கசப்பு என்ற ருசிகளுக்குப்பின் (''ரசா'') ஓர் உயர்ந்த ரசனையுள்ளது எனக் காணலாம். உப்பில்லாத சாப்பாட்டை அதுபோல் சாப்பிட்டால் “ரசா” தெரியும் என்பதால், உப்பில்லை என்பது தெரியாது.

**பரம்பொருளைக் கண்டபின் ''ரசா'' என்பதும் மறைந்துவிடும்.**

3) யோகம் - தர்க்கம், நியாயம், யோகம், பூர்வ மீமாம்சம்....என தத்துவத்தின் 6 பகுதிகளில் ஒன்றான “யோகம்” - என்பதை நாடுபவர் வேதம், உபநிஷதங்களைக் கடந்து செல்கிறார்.

4) வழிபடுபவரின் வகைகள்:

சிறு தெய்வங்களை வழிபடுபவர்கள் - காட்டேரி, அம்மன், கிராமதெய்வம், குலதெய்வம் - முடிவாக சிறு தெய்வங்களை யடைகிறார்கள்.

5) பிரகலாதன் அசுரன்.

6) கடவுள்களுக்கு குணம் உண்டு. அவர்கள் குணத்திற்கு கட்டுப்பட்டவர்கள்.

7) சரணாகதி என்றால் ஜீவன் புருஷோத்தமனுக்குச் சரண் அடைவதாகும்.



8) எல்லா ஜீவன்களும் அழியாத அமரத்வமுள்ளவர், உடல் மட்டுமே அழியும்.

9) ஈஸ்வரன் “பிரம்மம்” என நாம் அறிவதைக் கடந்தது.

10) அகந்தை அழிவது பிரம்ம நிர்வாணமெனப்படும்.

11) ஆன்மா காலத்தினுள் நகரும் கதியே இயற்கை எனும் பிரகிருதி.

12) “சர்வதர்மான் பரித்தஜ்ஜ” தீமையிலிருந்தும், பாவங்களினின்றும் விடுதலை தரும். திருவுருமாற்றம் கிடைக்காது.

13) பக்குவமான மனிதனை மோட்சத்திற்கு, கீதை அழைக்கிறது. இக்காலத்து மனிதன் தனக்கு மட்டும் முடிவு தேடவில்லை. உலகத்திற்கு முடிவு தேடுகிறான். அவனுக்குச் சொல்ல கீதையில் எதுவுமில்லை.

14) பரமாத்மா, ஜீவாத்மா, பிரபஞ்சத்தின் ஆத்மா என இறைவனை மூன்றாகப் பிரித்து முதலில் சொல்லியது கீதை.

15) ஓம் என்பது பிரம்மத்தின் மூன்று நிலைகளைக் குறிக்கும். உலகை நாடுவதும், உள்ளுறையும் சூட்சுமமும், ஈஸ்வரனும் சந்திப்பது ஓம்.

⁂ ⁂ ⁂

## ஸ்ரீ அரவிந்த சுடர்

முரண்பாட்டை உடன்பாடாகக் கண்டால் அதுவே ஆரம்பம். இது சிந்தனையை ஸ்தம்பிக்கச் செய்யும்.

"அன்பர் உரை''

## என்றும் எதிலும் வெற்றி பெறுவதற்கான வழிகள்

*(சென்னை பெரம்பூர் ரிஷி இல்லத் தியானமையத்தில் 25.04.1999 அன்று திருமதி ரேவதி சங்கரன் நிகழ்த்திய உரை)*

வெற்றி என்பது தோல்விக்கு எதிரானது. அதனால் வெற்றியைத் தேடுபவர்க்குத் தோல்வியும் உண்டு என்பது நியதி. வெற்றியும் தோல்வியும் எதிரானவை என்பது மட்டுமன்று. இதேபோல் பல இரட்டைகளை நாம் அறிவோம். ஒளி, இருள், உயர்வு, தாழ்வு, செல்வம், வறுமை, உடல்நலம், நோய் என ஏராளமான இரட்டைகளுண்டு. இவை அனைத்தும் சேர்ந்தது வாழ்வு.

ஏனிந்த இரட்டைகள் ஏற்பட்டன? சீரான வாழ்வுக்கு இரட்டைகள் தேவையில்லை. வாழ்வு உயர்ந்து வளர்ந்து முன்னேறுவதாகும். முன்னேற்றம் எனில் தாழ்ந்த இடத்திலிருந்து உயர்ந்த இடத்திற்குப் போவதாகும். எனவே உயர்வும், தாழ்வும் இருக்கின்றன.

இதுவே சட்டமானால் தோல்வியை விலக்கி, வெற்றியை மட்டும் நாடுவது எப்படி? அப்படி அது கிடைத்தால், முன்னேற்றமிருக்காதா? உடலுக்கு வியாதி வரலாம். வரவேண்டும் என்ற அவசியமில்லை. வியாபாரத்தில் நஷ்டம் உண்டு. அவசியமாக நஷ்டம் ஏற்படவேண்டுமென்பதில்லை.

**தாழ்ந்ததிலிருந்து உயர்ந்ததற்குப் போவது ஒரு வகை முன்னேற்றம். உயர்ந்ததிலிருந்து மேலும் உயர்வுக்குப் போவது அடுத்த வகை முன்னேற்றம்.**

நாம் முதல் வகை முன்னேற்றத்தை விலக்கி, அடுத்த வகையை நாடுகிறோம். இது சாத்தியமா? சாத்தியம் எனில் சாதிப்பது எப்படி?



பயிர் வானத்தைப் பார்த்திருந்தவரை மகசூல் கிடைக்குமா? சாவியாகுமா என்பது நிலை, நிர்ணயிப்பது வானம். மோட்டார் போட்டு நீர் இறைக்க ஆரம்பித்தபின் பயிர் விளையுமா இல்லையா என்பது போய்விட்டது. முனிசிபல், கார்ப்பரேஷன், சர்க்கார் பள்ளிகளில் பிள்ளைகள் சேர்ந்தால், பாஸாகுமா என்பது கேள்வி. பிரபலமான பள்ளிகளில் சேர்ந்தபின் பாஸா, பெயிலா என்பது கேள்வி யில்லை. மார்க் என்ன வரும் என்பதே கேள்வி. விமானப்பிரயாணம், ரயில் பிரயாணம் ஆகியவற்றிலும் ஆரம்பகாலத்து நிலை அடியோடு மாறிவிட்டது. மருந்துகள் பெருவாரியாக வந்தபின் வியாதி வந்தால் பிழைக்குமா என்பது மாறி, எவ்வளவு சீக்கிரம் குணமாகும் என்பதே பிரச்சினை. பல துறைகளிலும் தோல்வி என்பது குறைந்து வருவதை நாம் காண்கிறோம்.

**வாழ்வு என்பது அனைத்துத் துறைகளும் சேர்ந்தது. வாழ்வில் தோல்வி குறைந்து, மறையும், என்ற நிலை ஏற்பட வழியுண்டு என்பதை நடைமுறையாலும், அன்னை அருளாலும் விளக்கலாம்.**

இது சம்பந்தமான கருத்துகள்:

* தோல்வியே இல்லாமல் நாம் இன்று பல காரியங்களைச் செய்கிறோம்.
* நாம் அதை அக்கண்ணோட்டத்தில் புரிந்துகொள்வதில்லை.
* அக்காரியங்கள் உடலால் தானே செய்யப்படுபவை sub conscious acts.
* உடலால் தானே நடப்பவற்றை அறிவால் நாமே நடத்த முடியுமானால், இனி தோல்வி மறைந்துபோகும்.
* உடலால் நடக்கும் காரியங்களை ஆராய்ந்து அவை நடைபெறும் முறைகளைக் காணுதல் எளிது.

* புதியதாகச் செய்யும் காரியங்களில் நாம் ஏற்கனவே தோல்வியேயின்றி செய்யும் காரியங்களுக்குரிய முறைகளை இன்று புறக்கணிக்கிறோம்.
* புறக்கணிக்காவிட்டால் தோல்வி அற்றுப்போகும்.
* மனம் தான் அறிந்தவற்றைச் செய்தால் வெற்றியாவது, தோல்வியாவது வரும்.
* உடல் தான் அறிந்த காரியத்தைச் செய்தால் வெற்றி மட்டுமே வரும்.
* இன்று மனத்தாலும், அறிவாலும் செய்வதை, உடலால் அறிய முனைதல் பயன் தரும்.
* வெற்றியா, தோல்வியா என்ற இடத்தில் அன்னை வந்தால் வெற்றிமட்டும் உண்டு.
* முழு வெற்றி உடலுக்கும், அன்னைக்கும் உண்டு.
* நாம் அன்னையை ஏற்று, காரியங்களை உடலின் அறிவால் செய்தால் தோல்வியே எழாது.

ஒரு காரியம் வெற்றி பெறவில்லை என்றால் அங்கு நாம் காண்பதென்ன? உதாரணமாக ஒருவருக்கு வேலை கிடைக்கவில்லை என்றால், வேலைக்குரிய தகுதியொன்று குறைவாக இருக்கும். அவருக்கு வேலைக்குப் போக விருப்பமிருக்காது, தகுதிக்கு மேற்பட்ட வேலையை நாடுவார், தாம் விரும்பும் இடத்தில் வேலை வேண்டும் என்பார், வேலை நிலவரத்தை அறியாமல் கற்பனை உலகிலிருப்பார். இதுபோன்ற குறைகளால் வெற்றியற்றுப் போவதுண்டு. எல்லாத் தகுதிகளும், எல்லா நிபந்தனைகளும் பூர்த்தியான இடத்தில் வேலை கிடைக்கவில்லை என்பதும் வாழ்வில் உண்டு. அன்னையிடம் அது இல்லை. ஒரு காரியத்தில்

செயலுக்குரியன (physical components)

உணர்வுக்குரியன (vital energy)

அறிவுக்குரியன (mental knowledge)

என்றுண்டு. அவை சரியாக உள்ள இடங்களில் தோல்வி கிடையாது. நாம் கையெழுத்திடுவது, காப்பி போடுவது, நடப்பது, அன்றாட ஆபீஸ் வேலைகளைச் செய்வது, T.V.யைத் திருப்புவது போன்று தினமும் நூறு காரியங்களைச் செய்கிறோம். அவற்றுள் தோல்வி வருவதில்லை. வருவது மிகக் குறைவு.

இவற்றை எளிமையானவை என நினைக்கின்றோம். ஆரம்பத்தில் இவை எளிமையாக இருக்கவில்லை. இன்றும் பலருக்கு இவை எளிமையாக இல்லை. ரேஷன்கார்டு, gas, வீட்டிற்குக் குடி வைப்பது, அட்மிஷன் பெறுவது, பிரமோஷன், திருமணச் சம்பந்தம் போன்று ஏராளமான காரியங்களில் நமக்கு வெற்றி நிலையில்லை. இக்காரியங்கள் தவறியபோது பார்த்தால் நம் செயலில் விட்டுப்போனது இருக்கும். நம் செயலில் குறையில்லாமல் செய்தால் பெரும்பாலும் இவை வெற்றியடையும். தடையானால் அன்னையை அழைத்தவுடன் பூர்த்தியாகும்.

**செயலில் குறைவற்ற காரியம் தானே பூர்த்தியாகும்.**
**அன்னையை அழைத்தால் தவறாது பூர்த்தியாகும்.**

## அதிர்ஷ்டம் நமக்குண்டு

தினமும் 2000ரூபாய் சம்பாதிப்பவர் தினமும் 30,000 ரூபாய் சம்பாதிக்கும் ஆர்டரை அதிர்ஷ்டமாகக் கருதுகிறார். M.A. படித்து பாங்க் கிளார்க், ஏஜெண்ட் வேலைக்குப் பரீட்சை எழுதுபவர் I.A.S. பாஸ் செய்வதை அதிர்ஷ்டமாகக் கருதுகிறார். எவருக்கும் அவர் நிலையில் அதிர்ஷ்டம் என்பதுண்டு. அப்படிப்பட்ட காரியத்தை எடுத்து அதற்குரிய - செயல், உணர்வு, அறிவு பூர்வமான - காரியங்களைத் தவறாமல், குறைவற ஒருவர் செய்தால், அது பலிக்கும் வாய்ப்பு எழும். பலிக்காவிட்டால், அன்னையை அழைத்தால் தவறாது பலிக்கும்.

ஒரு காரியம் இதுபோல் பலித்தால், அடுத்த அதிர்ஷ்டமான காரியத்தை இதேபோல் குறைவரச் செய்வதுடன், எதிர்பார்ப்பு இன்றி செய்தால், காரியம் பூர்த்தியாகும். வாழ்வின் எல்லா முக்கியக் காரியங்களையும் ஒருவர் இதுபோல் நிதானமாக, அடக்கமாக செய்தால் அவர் அதிர்ஷ்டத்திற்குரியவர்.

தினமும் 2000ரூபாய் சம்பாதிப்பவர் அன்னையை அறிந்தவுடன், “எனக்கு ஒரு ஆர்டர் கவனத்திலுள்ளது. அது கிடைத்தால் தினமும் 30,000 வரும்” என்றார். ஆர்டர் வந்துவிட்டது. என்னால் சமாளிக்க முடியுமா என அவர் மனம் கேள்வி எழுப்புகிறது.

* அன்னையை மட்டும் மனம் நிறைவாக ஏற்று அழைத்தால், அதிர்ஷ்டம் வரும்.
* செயலைக் குறைவரச் செய்தால் தானே அது பூர்த்தியாகும்.
* என்றும், எதிலும் வெற்றி மட்டும் வேண்டுபவர், செயலுக் குரியவற்றைக் குறைவர அளித்து, அன்னையைப் பூரணமாக ஏற்று முயன்றால் அவர் பெறுவது **தோல்வி கலப்பில்லாத வெற்றியாகும்.**

**தோல்வி கலக்காத வெற்றிக்குரிய பெயர் அதிர்ஷ்டம்.**

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

விரதமும், தவமும் இறைவனை வாழ்வில் சந்திக்க உதவா. முதிர்ந்த அனுபவம் செறிந்த மனப் பக்குவத்தால் இறைவனை வாழ்வில் காணலாம்.



# அன்பர் அனுபவம்

**என்னை மலரவைத்த மகாசக்தி**

ஜெயஸ்ரீ, கும்பகோணம்

**ஸ்ரீ அன்னையின் அறிமுகம்:-**

மனிதனை நாடிவந்து அருள்புரியும் ஈடு இணையற்ற இனிய தெய்வமாம் ஸ்ரீ அன்னை, இந்த அடியேனையும் தேர்ந்தெடுத்ததற்கு என்றன் நன்றி கலந்த வணக்கத்தினை முதற்கண் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மூன்றாம் வகுப்பு படிக்கையில், விளையாட்டாக ஒருவருக்கொருவர் பொருட்களை மாற்றிக் கொள்கையில் ஒரு தோழியிடம் ஸ்ரீ அன்னை படம் பெற்றேன். ஆனால் அவர் அன்னை என்று தெரியாது. அந்தப் புகைப்படம் ஒரு வாரம்தான் என்னிடம் இருந்தது. கிறிஸ்துவக் கடவுள் அவர் என தவறாக நினைத்து வேறு ஒரு தோழியிடம் கொடுத்துவிட்டேன். அந்த ஒரு வாரமும் இனிய கனவு வந்தது. மிகப் பிரம்மாண்டமான பல அறைகள் கொண்ட, பல்வேறு தரப்பட்ட மக்கள் அமைதியாய் வாழ்ந்துவந்த அந்தக் கட்டிடத்தினை ஓர் அம்மையார் நிர்வகித்து வந்தார். புதியதாய் வரும் குறைகள்கொண்ட மக்களை அந்த அம்மையாரிடம் அழைத்துச் செல்வது என் பணியாய் இருந்தது. இதுவே அந்தக் கனவின் கதை. பிறகு நான் ஒன்பதாம் வகுப்பு படிக்கையில், அறிவியல் பாடத்தில் அதிக மதிப்பெண் பெற அன்னையிடம் சென்றேன். அப்பொழுதும் அவர் அன்னை என்று தெரியாது. அறிமுகப்படுத்திய தோழி அவரைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. சிறு வயதில் சந்தித்த அதே தெய்வம்தான் இவர் என்று அன்றும் உணரவில்லை. பத்தாம் வகுப்பு படிக்கையில் விடுமுறைக்கு எங்கள் கிராமம் விஷ்ணுபுரம் சென்றபொழுது அருகில் இருந்த வீட்டில் அன்னையின் காலண்டரைப் பார்த்து இவர் உங்கள் பாட்டியா? என வினவியதற்கு அவர்கள், “இவர்கள் அன்னை, பாண்டிச்சேரி” என்று மட்டுமே கூறினார்கள். மேற்கொண்டு விபரங்களை நான் தெரிந்துகொள்ள விரும்பினாலும் அவர்களால்

கூறமுடியவில்லை. பனிரெண்டாம் வகுப்பு படிக்கையில் நாளிதழ் ஒன்றில் ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் புகைப்படத்துடன் வெளிவந்த கட்டுரையினைப் படித்தேன். ஆசார, அனுஷ்டானங்களைப் பின்பற்றி வந்த எங்கள் குடும்பத்தாரிடம் பாண்டிச்சேரி சென்று வர அனுமதி கேட்பதில் தயக்கமாய் இருந்தது. பி.காம் முதலாமாண்டு படிக்கையில் ஸ்ரீ அன்னையிடம் தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. ஆம்! 1992-ஆம் வருடம் பிப்ரவரி மாதத்தில்தான் நான் அன்னையிடம் அருள் பெறும் பக்குவம் பெற்றேன்.

**ஸ்ரீ அன்னை செய்த முதல் அற்புதம்:**

என் தாயாருக்கு நீண்ட நாட்களாகக் கையில் வெடிப்பு இருந்தது. அவ்வப்பொழுது இரத்தம் வந்து எந்த வேலையும் செய்யமுடியாமல் கஷ்டப்பட்டார். இதனால் அடுத்த வீட்டில் குடியிருந்த ஒரு பெண்மணியைத் தமக்கு உதவிக்கு வைத்துக் கொண்டார். அவர் எங்களிடம் ஸ்ரீ அன்னைக்கு உங்கள் கவலையை எழுதி காணிக்கை அனுப்புங்கள் என்றார். ஆஸிரம முகவரியையோ, அன்னை பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளையோ அவர்களால் கூறமுடியவில்லை. அன்னை என்பவர் அயல்நாட்டவர், அற்புதம் செய்பவர் என்று மட்டும் கூறினார். கடவுள் நம்பிக்கையிலும், மருத்துவத்திலும் நம்பிக்கையிழந்த நான் அந்த மாமி கூறியதைத் தேவ வாக்காகக் கொண்டு, அன்னை பெயருக்குக் கடிதமும், காணிக்கையும் **pincode** தெரியாத நிலையிலும் அனுப்பினேன். பல்வேறு கால கட்டத்தில் சிறு வயது முதலே அவர் எங்களைத் தேடி வந்திருந்தும் அவரை ஏற்றுக் கொள்ளாமலே இருந்துவிட்டோம் என்பதனை அன்றுதான் உணர்ந்தேன். காணிக்கை அனுப்பிய அன்றே எனக்குப் பகுதி நேர வேலை கிடைத்தது. நான் வேலைக்கு என விண்ணப்பிக்காமலே வேறு ஒரு தோழி வேலையில் அமர துணைக்குச் செல்கையில் என்னையும் சேர்த்துக்கொண்டார்கள். அந்த வேலை எனது கல்லூரிப் படிப்புக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் இருந்ததுடன் எங்கள் பொருளாதாரப் பிரச்சினையும் தீர உதவியது. இரண்டு நாட்களில் அருகில் உள்ள வீட்டில் சித்த வைத்தியர் ஒருவர் வந்துள்ளார்



எனவும் என் தாயாருக்குச் சிகிச்சை அளிக்க விரும்புவதாயும் கூறி ஒரு மாமி என் தாயாரை அவரிடம் அழைத்துச் சென்றார்கள். அவர் சிவந்த மேனியுடன், மேல் சட்டை அணியாதவராய், நல்ல உடல்நலத்துடன், வெள்ளைத் தாடியுடன் பார்ப்போரைக் கவரும் தீட்சண்யப் பார்வையைக் கொண்டவராய் மிகவும் வயதானவராய் இருந்தார். அவர் யார் என அந்த மாமியிடம் கேட்டதற்கு “அவரைப் பற்றி எங்களுக்கும் ஒன்றும் தெரியாது. என் கணவர் கம்பவுண்டராக இருப்பதால், அவரைத் தேடி இந்த மனிதர் வந்தார். தாம் ஒரு சித்த வைத்தியர் என அறிமுகம் செய்து கொண்டபொழுது, இவரும் சில சந்தேகங்களை அவரிடம் கிளியர் செய்யும்பொழுது உனது தாயாரின் கையில் உள்ள வெடிப்புப் பற்றி இவர் கேட்டார். உடனே உன் தாயாரை இங்கு அழைத்து வரச் சொன்னார்கள். என் கணவருக்கும் இவரை முன் பின் தெரியாது” என விபரம் அளித்தார். அவர் என் தாயாருக்குக் கையில் களிம்புபோல் ஒன்றை தடவினார். பிறகு அவரிடம் விடைபெற்று வந்தோம். காணிக்கை அனுப்பிய ஒரு வாரத்தில் ஸ்ரீ அன்னையிடமிருந்து பிரசாத பாக்கெட் கிடைத்ததுடன் அந்தப் பெரியவரின் கை என் தாயாரின் கைமேல் பட்டதும் மென்மையாகிவிட்டது. பத்தாண்டு காலமாகப் படாதபாடுபட்ட அவர் ஸ்ரீ அன்னையின் மகிமையால் ஒரு வாரத்தில் குணமடைந்து விட்டார். தொடர்ந்து நாங்கள் காணிக்கை அனுப்புகையில் ஸ்ரீ அரவிந்தர் படம் முதல் முறை வந்தபொழுது நான் முழுவதும் அதிர்ச்சியடைந்தேன். என் தாயாரின் கையைக் குணப்படுத்திய அந்தப் பெரியவரும் இதே தோற்றத்தில்தான் வந்தார் என்பதுதான் காரணம்.

**ஆஸிரமத் தரிசனம்:**

ஸ்ரீ அரவிந்தரையும், ஸ்ரீ அன்னையையும் தரிசிக்க புதுச்சேரி செல்லவேண்டும் என்ற விருப்பம் எழுந்தது. என் தந்தைக்கு மற்ற தெய்வங்களை வணங்க விருப்பம் இல்லை என அறிந்து மனதிற்குள் நானே ஒரு கோயில் எழுப்பி மலர்களைச் சமர்ப்பித்து வணங்கி வந்தேன். அடுத்த வீட்டிற்கு வந்திருந்த விருந்தாளி ஸ்ரீ அரவிந்த அன்னை மாத மலரினை என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லி

அந்த மாமியிடம் கொடுத்தனுப்பியிருந்தார்கள். நான் கல்லூரிக்குச் சென்றிருந்ததால் என் தந்தை அந்தப் புத்தகத்தை வாங்கி வைத்துக் கொண்டதுடன், அதனைப் படித்தும் இருக்கிறார். “SSC (ஸ்டாப் செலக்ஷன் கமிஷன்) தேர்வு எழுத பாண்டிச்சேரி செல்லட்டுமா?” என தந்தையிடம் கேட்டபொழுது, ஆஸிரமம் சென்று வருவதற்கும் சம்மதம் கிடைத்தது. சமாதி தரிசனம் செய்யவேண்டும் என்பதற்காக அந்தத் தேர்வினை, காரணங்காட்டி புதுச்சேரி சென்றேன். என்னுடன் என் தம்பியும் வந்தான். நான் தேர்வு எழுதிக் கொண்டிருந்த நேரம் அவன் ஆஸிரமம் எங்கு உள்ளது என்பதனை விசாரித்து வந்துவிட்டான். மதியம் இருவரும் சமாதி தரிசனம் செய்கையில், எனக்கு மறுபடியும் ஓர் அதிர்ச்சி. மனதில் ஏற்படுத்திய அதே சூழலையும் அலங்காரத்தையும் அங்கும் பார்த்ததுதான் அதற்குக் காரணம். அதற்குப் பிறகு நான் ஆஸிரமம் செல்லவேண்டும் என்று நினைக்கும்பொழுதெல்லாம் என் தந்தையின் சம்மதம் கிடைத்ததுடன் அவரே துணைக்கும் வந்தார்.

**பட்ட மேற்படிப்பும், சரணாகதியும்**

ஸ்ரீ அன்னையின் அருளினால் எங்களுக்கு ஏற்பட்ட நல்ல முன்னேற்றங்களை உற்று நோக்கிய நான் இனிமேல் ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் கோட்பாடுகளை வாழ்க்கையில் கடைப்பிடித்து இனி அவர்களுக்காக வாழவேண்டும் எனத் திட்டமிட்டேன். ஆகஸ்ட் மாதம் 1994-ஆம் வருடம் 10-ஆம் தேதி என்னையுமறியாமல் அடிக்கடி உணர்ச்சிகள் மெய்சிலிர்ப்பதனை உணர்ந்தேன். எனக்கு **C.A.** படிக்கவாவது அல்லது முதுநிலை படிக்காவாவது உத்தரவுடன் அருள் தாருங்கள் எனக் கேட்டுக் கொண்டே அவர்களை நினைத்து உறங்கி விட்டேன். கல்லூரியிலும், தொலைதூரக் கல்வி இயக்கத்திலும் அட்மிஷன் முடிந்துவிட்ட சமயம், இனி முயன்று பலனில்லை என்ற நிலை இருந்தது, எங்கள் கல்லூரி அலுவலர் ஒருவரிடம் எங்களது தமிழ்த் தட்டெழுத்துப் பொறியினை வாடகைக்குக் கொடுத்திருந்தோம். வாடகைப் பணம் செலுத்த வந்திருந்த அவர், நான் மேற்கொண்டு படிப்பினைத் தொடராதது



குறித்து அறிந்து என்னை உறக்கத்திலிருந்து எழுப்பச் சொன்னார். “உனக்கு விருப்பம் இருந்தால் மேற்கொண்டு நம் கல்லூரியிலேயே **M.Com.** படியேன், எனக்கு ஒரு சீட் உண்டு. அந்தக் கோட்டாவில் சேர்த்துவிடுகிறேன். இதோ அட்மிஷன் புக்கையும் அலுவல் விஷயமாகக் கையோடு கொண்டு வந்துள்ளேன்” என்றார்.

“நீ இன்டர்வியூ அட்டண்ட் பண்ண அவசியமில்லை. இதுவரை நடந்த பாடங்களையெல்லாம் விரிவுரையாளர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்'' என்று கூறிக்கொண்டே அட்மிஷன் அப்ளிகேஷனை பூர்த்தி செய்தார். ஸ்ரீ அன்னையின் முன்னாலேயே எங்களது இல்லத்திலேயே நான் எம்காம் சேர்ந்தேன். கல்லூரிக் கட்டணம் ரூ.2000 கட்டவேண்டும். கல்லூரிக்கு நீ வரும்பொழுது கட்டினால் போதும். இரண்டு நாட்கள் சென்றபிறகு நீ வகுப்புக்கு வந்துவிடு என்றார். மறுநாள் சிட்டி யூனியன் வங்கியில் கல்விக்குக் கடன் கேட்டு விண்ணப்பித்தோம். அதற்கு மறுநாளே லோன் **sanction** ஆகி பணமும் கிடைத்தது. ஸ்ரீ அன்னையின் பூரண அருளினால் அதற்கு மறுநாள் கல்லூரி சென்றேன். அடுத்த செமஸ்டரிலிருந்து கல்லூரிக் கட்டணம் செலுத்துவதில் ‘‘உனக்கு 40 சதவிதம் அளவிற்கு விலக்கு அளிக்கிறோம்” எனச் செய்தி கிடைத்தது. மேற்படிப்புக்கு ஸ்ரீ அன்னை அருள் புரிந்ததுடன், பகுதி நேர வேலையும் ஒரு சாக்பீஸ் கம்பெனியில் வாங்கி தந்தார். ஒவ்வொரு நாளும் ஸ்ரீ அன்னையிடம் என்னையும், என் பணியையும், என் படிப்பையும் ஒப்படைத்துச் சென்றேன். ஆகவே அவர் அன்றாடம் அருளிய அருள் ஏராளம். அதிலிருந்து ஒரு சில அற்புதங்களை இங்குக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாட்டுக் கல்லூரிகள் அனைத்திற்கும் மாநில அளவில் நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டிகளில் கலந்துகொள்ள என்னையும், பி.லிட் மாணவர் ஒருவரையும் எங்கள் கல்லூரிச் சார்பாகச் சென்னைக்கு அனுப்பினார்கள். அது அரசியல் சம்பந்தப்பட்ட போட்டியாக இருந்ததனால் பரிசு பெறுவதில் போட்டி நிறையவே இருந்தது. நிச்சயம் பரிசினைப் பெற்றிடுவேன் என்ற

நம்பிக்கையில் என்னை அனுப்பிய முதல்வருக்கும், ஏனைய ஆசிரியருக்கும், நண்பர்களுக்கும், குடும்பத்தினர்க்கும் நான் நல்ல பெயர் எடுத்துத் தரவேண்டும் என்று ஸ்ரீ அன்னையிடம் பிரார்த்தித்து அப்போட்டியில் கலந்து கொண்டேன். ஆனால் பரிசு கிடைக்கவில்லை. மனதில் எந்தக் கவலையும் இல்லாமல் திரும்பவும் ஸ்ரீ அன்னைக்கு தோல்வியினைச் சமர்ப்பித்தேன். ஒரு வாரம் கழித்தபின்பு அதே தலைப்பில் போட்டிகளை மாவட்ட அளவில் நடத்தித் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை மாநில அளவிற்கு எடுத்துக்கொள்வார்கள் என்ற தகவல் வந்தது. மறுமுறையும் என்னைக் கல்லூரி அலுவலர் அழைத்து “நீ இதில் கலந்துகொள்வதாயின் நாங்கள் அடையாளக் கடிதம் தருகிறோம். செல்கிறாயா?” எனக் கேட்டனர். அவர்கள் கூறிய இடம், நாள், நேரம் போன்ற தகவல்களை அரைகுறையாக காதில் வாங்கிக் கொண்டே, நான் இந்த முறை கலந்து கொள்ளவில்லை என கூறிவிட்டேன். சொந்த வேலை ஒன்று அன்றையதினம் நான் செய்ய வேண்டி இருந்ததால் அவ்வாறு கூறினேன். ஸ்ரீ அன்னையின் அருளினால் அந்த வேலை முதல்நாளே முடிந்துவிட்டது. மறுநாள் காலை ஸ்ரீ அன்னையை வணங்கும்பொழுது நீயும் போட்டியில் கலந்துகொள் என்று அவர்கள் கூறுவதுபோல் இருந்தது. அறிமுகக் கடிதமும் இல்லாமல், சரியான இடமும் தெரியாமல் ஸ்ரீ அன்னையை மட்டுமே துணையாகக் கொண்டு, போட்டி நடக்கும் ஊருக்கு சென்றேன். பஸ்நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தபால் அலுவலகத்தில் எனக்கு தெரிந்த அந்த முகவரியினை சரியான விளக்கம் கேட்டுக்கொண்டு அவ்விடத்திற்கு சென்றேன். அறிமுக கடிதம் என்னிடம் இல்லை என்பதனை விழாக் குழுவினர்களிடம் கூறி கல்லூரி அடையாள அட்டையை மட்டுமே காண்பித்தேன். போட்டியில் நானும் கலந்து கொள்ள அவர்கள் சம்மதித்தார்கள். புதிய தெம்புடன் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டேன். மூன்று நாட்கள் கழித்து நாளிதழ் ஒன்றில் அப்போட்டி பற்றிய செய்தியினையும் வெற்றி பெற்றவர்களின் பெயர்களையும் வெளியிட்டியிருந்தார்கள். ஸ்ரீ அன்னையின் அருளினால் கட்டுரைப்போட்டியில் நான் முதல் பரிசினை வென்றேன். இதனை



அறிந்த கல்லூரி ஆசிரியர்களும் ஆச்சரியப்பட்டார்கள். நான் அப்போட்டியில் கலந்துகொண்டதை அவர்கள் அறியாததே அதற்குக் காரணம். ஸ்ரீ அன்னையிடம் செய்யும் பிரார்த்தனை பலிக்காமல் போனதில்லை என்பதற்கேற்ப நிகழ்ந்தது இந்நிகழ்ச்சி.

காமர்ஸ் அசோசியேஷன் **(Commerce Association)** நிகழ்த்திய ஒரு கருத்தரங்கில் **(seminar)** நானும், என் தோழியும் பங்கெடுக்கும் வாய்ப்பு கிட்டியது. தணிக்கையியல் **(auditing)** பற்றிய அந்தக் கருத்தரங்கிற்கு நிறைய தகவல்களை நாங்கள் சேகரிக்க வேண்டியிருந்தது. விரிவுரையாளர்கள் பலரும் அதில் கலந்து கொள்வதால் நாங்கள் சிறப்பாக **prepare** செய்ய நினைத்தோம். ஆகவே பல ஆடிட்டர்களைக் கும்பகோணத்தில் சந்திக்கச் சென்றோம். அவருள் சில பேர் ஊரில் இல்லை எனவும், சில பேர் இப்பொழுது எங்களுக்கு நேரமில்லை எனவும் கூறிவிட்டார்கள். விரக்தியடைந்த என் தோழியிடம் ஸ்ரீ அன்னை நமக்கு உதவுவார் என நம்பிக்கையுடன் கூறினேன். நாம் இந்தக் கருத்தரங்கில் பரிசு பெற வாய்ப்பு கிடைத்தால் நீ கூறும் அன்னையை நான் வணங்குகிறேன் என்றாள் அவள். பிறகு இருவரும் கலந்து ஆலோசித்து, நமக்குத் தெரிந்த விஷயங்களையும், ஏற்கனவே கற்ற முறைகளையும் கொண்டு இந்த **topic**-ஐத் தயார் செய்வோம் என முடிவெடுத்தோம். ஒரு நாள் ஹாஸ்டலில் தங்க என் பெற்றோரிடம் அனுமதி பெற்று இரவு முழுவதும் தயார் செய்தோம். கருத்தரங்குத் தினத்தன்று சொந்த அலுவல் காரணமாக நான் வெளியூர் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அந்தத் தோழியும் வேறு ஒரு தோழியும் கருத்தரங்கில் கலந்து கொண்டனர், பிறகு அன்னையின் பூரண அருளினால் எங்களுக்கே பரிசு கிடைத்தது. என் வகுப்பு தோழியர் அனைவரும் அன்றே ஸ்ரீ அன்னையை ஏற்றுக் கொண்டனர்.

குறிப்பாக என் வகுப்புத் தோழிகள் அனைவரும் ஸ்ரீ அன்னையை வழிபட்டு அவர்கள் கொள்கையினைப் பின்பற்றி வர ஆரம்பித்தோம். இதனால் ஒவ்வொரு நாளும் எங்களுக்கு வெற்றியும் பாராட்டும் சந்தோஷமும் கிடைத்துக் கொண்டிருந்தன. கடைசிச்

செமஸ்டரில் கம்ப்யூட்டர் பேப்பர் ஒன்று நாங்கள் எழுத வேண்டி இருந்தது. அதற்காக பயிற்சியினை நாங்கள் முழுமையாகப் பெறுவதற்குள் “**internal**” தேர்வு அறிவித்துவிட்டார்கள். போதிய பயிற்சி பெறாத சில தோழர்கள் மிகவும் கவலைப்பட்டனர். நான் ஏற்கனவே தனியார் பயிற்சி மையம் ஒன்றில் கம்ப்யூட்டர் டிப்ளமோ படித்திருந்ததால், தேர்வுபற்றி பயம் இல்லாமல் இருந்தேன். இருந்தாலும் சக தோழர்களுக்காக ஸ்ரீ அன்னையிடம் பிரார்த்தித்தேன். பல்கலைக்கழகத்தில் கம்ப்யூட்டர் இன்ஜீனியரை எங்கள் கல்லூரிக்கு அனுப்பக் கோரி நிர்வாகத்தினர் விண்ணப்பித்துக் கொண்டேயிருந்தனர். நாங்கள் எதிர்பார்த்த நேரத்தில் அவர்கள் வரவில்லை. எங்கள் தேர்வு அன்று காலைதான் அவர்கள் வந்தார்கள் எனக் கூறிய ஆசிரியர் உங்களுக்கு **oral** ஆகவே தேர்வு நடத்துகிறோம் என்கிறார். அன்றையத் தேர்வில் அனைவரும் அதிக மதிப்பெண், எடுத்தது ஸ்ரீ அன்னையின் அருளினால் மட்டுமே.

ஸ்ரீ அன்னையால் கிடைத்த படிப்பினை அவர்களுக்கு நன்றி கூறும் வகையில் அவர்களின் கொள்கைகளைக் கொண்டே எம்.காம் **project** செய்யவேண்டும் என நினைத்தேன். தலைப்பையும் ஸ்ரீ அன்னையே தேர்ந்தெடுத்துத் தரவேண்டும் என்ற எண்ணத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும் இடத்தில். 100 தலைப்புகளை எழுதி வைத்து, குலுக்கல் முறையில் எந்தத் தலைப்புக் கிடைக்கிறதோ அதையே அன்னை கொடுத்த தலைப்பாக ஏற்பது என்று முடிவு செய்தேன். அப்படிச் செய்தபொழுது 72-ஆம் நம்பரில் “**The problems of women employees in Kumbhakonam**“ என்ற தலைப்பு, கிடைத்தது. இது எனது **subject**க்குத் தொடர்பில்லை என்றாலும் சமூகக் கண்ணோட்டத்துடன் இதனை மேற்கொள்வதுடன் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் கொள்கைகளை வலியுறுத்தி எழுதவேண்டும் என முடிவு செய்தேன். மற்ற தோழர்கள் அவர்களின் **project-work**-ஐ எளிய முறையில் முடித்தனர். வேலைக்குச் செல்லும் பெண்களில் பலதரப்பட்டவர்களிலிருந்து 100 பேரிடம் **schedule method**-இல் தகவல் சேகரம் செய்ய வேண்டியிருந்தது. தலைப்புக்குத் தகுந்த தகவல்களைத் திரட்ட சில சமூக அமைப்புகளையும் அணுக



வேண்டியிருந்தது. குறித்த காலத்திற்குள் எனது **project**-ஐ முடிக்க சூழ்நிலை சரியில்லாமல் இருந்தது. சக தோழர்கள் அவர்களின் **project**-இன் **final stage**-க்கு வந்தாலும் என்னால் முதல் **chapter**-ஐக் கூட டைப் செய்ய இயலவில்லை. ஸ்ரீ அன்னையிடம் பூரணமாக **project**-ஐ ஒப்படைத்தேன். **Submit** செய்ய **March-18** கடைசி தேதி என தெரிவித்துவிட்டனர். **March** 14-ஆந் தேதியுடன் எங்கள் **class** முடிவடைந்தது. என் **guide** நான் குறிப்பு எடுத்திருந்த இரண்டு **chapter**-களின் **rough** காப்பியை **verify** செய்து தந்துவிட்டு இதனை **print-out** எடுத்துவிடுங்கள், மீதமுள்ள **chapter**-களை நீங்களே தயார்செய்து **final**-ஆக **thesis**-ஐ 18-ஆந்தேதி **submit** செய்துவிடுங்கள் என்றார். மீதமுள்ள நான்கு நாட்களுக்குள், மீதி **chapter**-களை எழுதுவதுடன், அதனை **print-out** எடுத்து பைண்டும் செய்யவேண்டியிருந்தது. இது சாத்தியமாகுமா? எனக் கேள்வி எழுந்தாலும், நிச்சயம் அன்னை உதவுவார் என்ற பதிலும் மனதிற்குள் இருந்தது. கல்லூரியிலிருந்து வீட்டிற்கு வருகையில், ஒரு கம்ப்யூட்டர் சென்டர் கண்ணில்பட்டது. பலமுறை அந்த நகருக்கு நான் சென்றிருக்கிறேன். அந்த சென்டர் கண்ணில் பட்டதேயில்லை. இதுவும் ஸ்ரீ அன்னையின் அருளே என ஏற்று உரிமையாளரை அணுகினேன். 2 நாட்களுக்குள் **project** முழுவதும் **print-out** எடுக்க இயலாது என்பதனை, நான் அறிந்திருந்தாலும் அவசியம் முடித்தாகவேண்டும் என்ற சூழ்நிலையால் மற்ற சென்டர்களை நான் அணுகவில்லை. **Computer work** செய்ய ஆள் இல்லை என்ற பதிலே அவர்களிடமிருந்து வந்தது. நானே வேலையைச் செய்துகொள்ள அனுமதி அளிப்பீர்களா? என அவர்களிடம் வினவும்பொழுதே அந்த உரிமையாளரின் பெற்றோர் அங்கு வந்தனர். மிக்க ஆச்சரியமாக இருந்தது. ப்ரைமரி ஸ்கூலில் எனக்கு அவர்கள் வகுப்பு நடத்திய ஆசிரியர். ஆகவே அவர்கள் சம்மதத்துடன் இரவு பகலாய் இரண்டு நாட்களில் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டேன். **Project**-இன் கடைசி அத்தியாயத்தில் தீர்வு அளிக்கையில் **spiritual solution to all problems** என்ற தலைப்பில் பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை அவர்களைப் பற்றி எழுதியுள்ளேன். 16-ஆந்தேதி இரவு **binding**

செய்யக் கொடுத்தேன். ஸ்ரீ அன்னையின் அருளால் 17-ஆந்தேதி காலை ஒரு காப்பியினைக் கொடுத்துவிட்டார்கள். மீதி 4 காப்பிகளை மறுநாள் தருவதாகக் கூறினார்கள். 17-ஆந்தேதி காலையே ஆஸிரமம் வந்து ஸ்ரீ அன்னைக்கு நன்றிகூறி அந்த **project book**-ஐயும் சமாதியில் வைத்து ஆசி வாங்கினேன். மறுநாள் அனைத்து **copy**-களையும் **laminate** செய்து குறித்த நேரத்திற்குள் கல்லூரியில் **submit** செய்துவிட்டேன். இரண்டு மாதத்தில் முடிக்க வேண்டிய வேலையை இரண்டே நாட்களில் முடித்ததால் அனைவரும் ஆச்சரியப்பட்டனர். ஏப்ரல் 24-ஆந்தேதி **external** என அறிவித்தார் கள். அன்றைய தினம் தரிசன தினமாக அமைந்ததால் ஆசிரமம் செல்ல இயலாதோ எனக் கவலைப்பட்டேன். ஸ்ரீ அன்னை அருளினால் 22-ஆந்தேதியே **external** தேர்வு நடந்தது. வித்தியாசமான தலைப்பினைத் தேர்ந்தெடுத்தது குறித்து அவர்கள் பாராட்டினார்கள்.

23-ஆந்தேதி செகண்தராபாத்திலிருந்து ஓர் குடும்பத்தினர் எங்கள் வீட்டு மாடியில் குடியிருப்பவர்களைக் காண வந்தார்கள். மறுநாள் அவர்கள் பாண்டிச்சேரி செல்ல வேண்டும் என தெரிய வந்தது. அவர்கள் ஸ்ரீ அன்னை அன்பர்கள் எனவும், ஆஸிரமம் செல்வதற்காகவே வந்துள்ளனர் எனவும் கொஞ்சநேரத்தில் தெரிய வந்தது. உடனே எங்கள் இல்லத்திற்கு வந்து ஸ்ரீ அன்னையைத் தரிசித்துவிட்டு எங்களுடனே தங்கிவிட்டார்கள். மறுநாள் அவர்கள் என்னையும், என் அக்கா மகனையும் ஆஸிரமத்திற்கு அழைத்துச் சென்றதுடன் ஸ்ரீ அன்னையின் பெரிய திருவுருவப் படமும் வாங்கித் தந்தார்கள். **project**-இலும் அதிக மதிப்பெண் பெற முடிந்தது. ஸ்ரீ அன்னையின் பூரண அருளினால் மட்டுமே.

கல்லூரி இறுதி ஆண்டுத் தேர்வில் முதல் இடத்தில் பாஸ் செய்த துடன் பாஸ் செய்த அனைவருமே முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றோம்.

**ஸ்ரீ அன்னையின் அருளும், சகோதரரின் கல்வியும்:**

எனக்கு ஓர் இளைய சகோதரன் உண்டு. மேல்நிலை வகுப்பில் அதிக மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற்றான். அவனை இன்ஜினியரிங் கல்லூரியில் சேர்க்க ஸ்ரீ அன்னையிடம்



பிரார்த்தித்தோம். தம் அன்பர்களுக்கு அருளை வாரி வழங்கும் ஸ்ரீ அன்னை எங்களுடைய பிரார்த்தனைக்கும் பேரருள் அளித்துள்ளார்கள். இந்த வருடத்துடன் தனது படிப்பை முடிக்கும் அவனுக்கு ஸ்ரீ அன்னை வேலை வாங்கித் தருவதுடன் என்றும் பாதுகாப்பாய் இருப்பார் என மனமார நம்புகிறோம்.

**ஸ்ரீ அன்னையின் 4 அம்ச படம் வருகை:**

சென்ற ஆண்டு தரிசனத் தினங்களுக்குச் செல்கையில், ஸ்ரீ அன்னையின் 4-அம்ச படங்கள் கொண்ட தியான ஹாலில் அவர்களின் நாமத்தை ஜெபித்துக் கொண்டிருந்தேன். அன்பர்களுடன் கலந்து நாம ஜெபம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. 4 அம்சப் படமும் என் மனதில் பதிந்ததுடன், அவர்கள் மேல் பக்தியை இன்னும் அதிகரிக்கச் செய்தது. பிப்ரவரி மாதம் 1-ஆம் தேதிதான் எங்கள் இல்லத்திலும் தியானக்கூடல், புஷ்பாஞ்சலி ஆரம்பித்தோம், அப்பொழுது மிகச் சிறிய படங்கள்தான் வைத்திருந்தோம். அந்த மாதம் இன்னொரு அன்னை அன்பர் இல்லத்தில் நடந்த தியானக்கூடலில் ஒரு டாக்டர் அன்பரும் கலந்து கொண்டார்கள். அவர்கள் மையத்திற்கு வருகையில் தனது பர்ஸினை பஸ்ஸிலேயே விட்டுவிட்டு வந்ததனை அறியவில்லை. பிறகு மையத்திற்கு வந்து அறிந்து அந்த பர்ஸ் கிடைக்க ஸ்ரீ அன்னையிடம் பிரார்த்தித்தார்கள். அந்த பர்ஸில் வேறோர் அன்பரின் பணம் ஜீவனுள்ள மலர்கள் புத்தகம் வாங்குவதற்காக வைத்திருந்தார்கள். அத்துடன் இவர்கள் பணம் ரூ.500க்கு மேல் சில்லறையும் இருந்துள்ளது. அந்த பர்ஸ் கிடைத்தால் அதில் உள்ள இவரின் பணம் முழுவதும் ஸ்ரீ அன்னைக்கே செலவு செய்வதாக வேண்டிக்கொண்டார்கள்.

நிறைந்த மனதுடன் ஸ்ரீ அன்னை புஷ்பப் பிரசாதத்துடன் இவர் திரும்பிச் செல்கையில், அதே பஸ் - பேருந்து நிலையத்தில் இருந்திருக்கிறது. யாரோ இவர் பர்ஸை எடுத்துக் கண்டக்டரிடம் ஒப்படைத்திருக்கிறார். கண்டக்டரிடம் பர்ஸ் குறித்து இவர் கேட்கையில் உடனே அவர் கொடுத்துவிட்டார். அதில் இருந்த அத்தனைப் பொருட்களுடன் பணமும் இருந்துள்ளது. அந்த வாரத்தில்

ஸ்ரீ அன்னை பிறந்த நாளிற்கு ஆஸிரமத் தரிசனம் செய்ய இவர் சென்றிருக்கிறார். அங்கு, சிதம்பரத்திலுள்ள ஓர் அன்னை அன்பரைச் சந்தித்து, இந்நிகழ்ச்சியைக் கூறி அந்தப் பணத்தை என்ன செய்யலாம் என ஆலோசனை கேட்டிருக்கிறார். உங்களுக்கு விருப்பம் இருந்தால் என் பெயரை குறிப்பிட்டு அவர் வீட்டுத் தியான மையத்திற்கு ஸ்ரீ அன்னை படம் ஒன்று வாங்கித் தாருங்கள் என அவர் கூறியுள்ளார். அவர்களும், அந்தப் பணத்திற்கு படம் ஒன்று வாங்கி வைத்துக் கொண்டு எனக்காகக் காத்திருந்தார்கள். நான் ஆஸிரமம் செல்கையில் முதலில் அந்தப் படத்தினை என்னிடம் ஒப்படைத்தார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. பர்ஸ் கிடைத்த விபரத்தைக் கூறிய டாக்டர், தாம் வேண்டிக் கொண்டவாறே அன்னை அன்பரின் ஆலோசனை பேரில் எங்கள் இல்லத்திற்கு இந்தப் படத்தினை வாங்கிக் கொடுத்துள்ளார்கள் என்றார். இன்ப அதிர்ச்சியுடன் நான், அப்படத்தை சிறிதுநேரம் நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள். சமாதி தரிசனம் செய்துவிட்டு, ஸ்ரீ அன்னைக்கு நன்றி கூறிவிட்டு இப்படத்தைப் பெற்றுக் கொள்கிறேன், என்று கூறிவிட்டு அவ்வாறே செய்தேன். படத்தைப் பிரித்து பார்க்கையில் மேலும் சந்தோஷம். ஆம், அந்த படம் ஸ்ரீ அன்னையின் 4 அம்சங்கள் கொண்ட லேமினேஷன் செய்துள்ள படம். இதற்கு முன்பு மூன்று தரிசன தினங்களிலும் ஸ்ரீ நாமஜெபம் செய்ததற்கு இது நான் அளிக்கும் பரிசு என்று ஸ்ரீ அன்னை கூறுவதுபோல் இருந்தது. தியானக்கூடல் ஆரம்பித்த அந்த மாதமே 4 அம்சம் கொண்ட ஸ்ரீ அன்னை எங்கள் இல்லத்திற்கு வந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து ஸ்ரீ அன்னையே ஒவ்வோர் அதிசயத்தையும் நிகழ்த்தி, தாமே பெரிய போட்டோக்களில் வந்தார்கள். அவர்களின் நினைவாலே வாழும் எனக்கும், என் குடும்பத்தாருக்கும், சுற்றம், சூழலுக்கும் அவர் தம் அருளை வாரி வழங்கி பக்கபலமாய் பாதுகாக்கும் பரமனாய் இருந்துவருகிறார். அவர்கள் அருளும் செயல்களும் ஏராளம், தாராளம்.

❋ ❋ ❋





# நம்பிக்கை

**ஜுலை 2000 இதழ் தொடர்ச்சி**

S. அன்னபூரணி

பச்சைப் பசேலென்று நெற்கதிர்கள் காற்றில் ஆடிக்கொண்டிருந் தன. பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் கண்ணுக்குக் குளிர்ச்சியா யிருந்த நிலமகளை, கந்தனும், வேலாயியும் உற்சாகத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர். அருகிலிருந்த மர நிழலில் சாப்பாட்டுத் தூக்கை வைத்துவிட்டு அமர்ந்தாள் வேலாயி. கந்தனும் தலையில் கட்டியிருந்த முண்டாசை உதறித் தரையில் விரித்துவிட்டு அமர்ந்தான். அவனுக்குக் கவளம் கவளமாகச் சோற்றை உருட்டிக் கையில் போட ஆரம்பித்தாள். சாப்பிட்டுக் கொண்டே பேசினான் கந்தன். “புள்ளே, அம்மா புண்ணியத்தில அறுவடை நல்லபடியா முடிஞ்ச உடனே மகசூலைக் காசாக்கிவிட்டு அதை எடுத்துக்கிட்டு காணிக்கையா கொண்டு போய்க்கொடுக்கப் போறேன். நீ என்ன சொல்ற?”

“இதில் நான் சொல்றதுக்கு என்ன இருக்கு மச்சான்? நானே ஒரு கைநாட்டுப் பேர்வழி. நீ எது செஞ்சாலும் அது சரியாத்தான் இருக்கும். ஆனா நீ போகும்போது என்னையும் கூட்டிக்கிட்டுப் போவியா?” “ம் போகலாம்” என்று பச்சைக்கொடி காட்டியவுடன் வேலாயி முகம் மலர்ந்தாள்.

“என்ன கந்தா நல்ல மகசூல் போல இருக்கே. ஒன்னோட நெலத்தில விளைஞ்சது நல்ல தரமான நெல்லு. இந்தா இந்த பத்தாயிரம் ரூபாயை எண்ணி எடுத்துக்கோ. ஆனா நீ இதுக்கு எவ்வளவு ஒழைச்சிருப்பேன்னு எனக்கு நல்லாவே தெரியும்” என்றார் அந்தக் கூட்டுறவு நிலவளச் சங்கத்தின் அதிகாரி.

“என் கையிலே என்னங்க இருக்கு? எல்லாம் ஒங்களை மாதிரி பெரிய மனுஷங்க தயவுதான். வாரேனுங்க” என்று சொல்லியவாறு பணத்தை வாங்கிக்கொண்டு நடந்தான்.

“என்ன மச்சான் இது புதுசா ஒரு பெட்டி வாங்கிட்டு வந்திருக்கே?” “ஆமாம் இந்தப் பெட்டியிலே பணத்தை வெச்சு, இந்த பேப்பரை அதுக்கு மேலே போட்டு மூடி எடுத்துக்கிட்டுப் போகலாம்னு இருக்கேன்”.

முதன் முறையாக அவ்வளவு தூரம் பஸ்ஸில் பயணம் செய்த வேலாயிக்கு மிகவும் குதூகலமாக இருந்தது. பாண்டி பஸ் ஸ்டாண்டில் இறங்கி விசாரித்துக்கொண்டு ஆசிரம வாயிலை அடைந்தனர்.

“நீங்க யாரைப் பார்க்க வேண்டும்?”

“நாங்க அம்மாவைப் பார்க்க வந்திருக்கோம்”

“அந்தப் பக்கமா உள்ளே போங்க, அனுமதி கொடுத்தால் நீங்கள் பார்க்கலாம்”. கந்தனுக்கு உள்ளூறப் பயமாக இருந்தது. ஏதொவொரு குருட்டு தைரியத்தில் கிளம்பி விட்டோமே, இந்த இடத்தில் இருக்கிறவங்க எல்லாம் பெரிய மனஷங்களா தெரியறாங்க. நம்மளை மதிச்சு உள்ளே அனுமதிப்பாங்களா? அந்தச் சின்னப் பெண்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டு வந்தது தவறோ? என்று ஒரு கணம் நினைத்தான். மறுகணம். “சே, சே, அப்படி நினைக்கிறதே தப்பு. அம்மா, நீ எல்லோருக்குமே அம்மான்னு அந்தப் பொண்ணுங்க சொன்னாங்களே. நான் ஒங்களைப் பாக்காம போகக் கூடாது” என்று வேண்டிக் கொண்டான்.

“உங்களை வரச் சொன்னார்கள்” என்று உத்தரவு கிடைத்ததும் மிக பவ்யமாகத் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு கையில் பணத்துடன் கூடிய அந்தச் சிறு பெட்டியையும் எடுத்துக்கொண்டு அன்னையைத் தரிசிக்கச் சென்றான். அவரைப் பார்த்ததும் மனம் உருகிப்போய் பேச வாயெழாமல் நின்றான்.



‘‘அம்மாடி இவங்க செக்கச்செவேல்னு ராசாத்தி மாதிரி இருக்காங்க. முகத்தில என்ன கருணை? இவங்க என்னைத் தன் குழந்தையா ஏத்துப்பாங்களா? நானோ படிப்பறிவேயில்லாத ஏழை விவசாயி. எனக்குத் தமிழைத் தவிர வேற பாஷை தெரியாது. இவங்க கிட்ட சொல்ல வந்ததை எப்படி நான் சொல்வேன்?” அவன் மனதில் ஓடும் எண்ணங்களைப் புரிந்துகொண்டது போல அருகிலிருந்த உதவி யாளரிடம் அன்னை கண்ஜாடை காட்டவே அவர் கந்தனிடம் சென்று தமிழில், “என்ன வேணுமென்று கேட்கறாங்க அம்மா” என்றார்.

“கும்பிடறேனுங்க, எனக்குத் தமிழ் தவிர வேற பாஷை தெரியாது. அம்மாவைப் பத்திக் கேள்விப்பட்டேன். அவங்க புண்ணியத்தில் என் பரம்பரை நிலம் என் கைக்குக் கிடைச்சதுங்க. நல்ல மகசூலும் ஆயிடுச்சு. அதைக் காசாக்கி அம்மாவுக்குக் காணிக்கையா கொடுக்க வந்தேனுங்க, அம்மா ஆசீர்வாதம் வேணும்.”

உதவியாளர் அன்னையிடம் சென்று கந்தன் சொன்னதைத் தெரிவிக்க, அதை அங்கீகரிக்கும்விதமாக தலையசைத்து அவர்கள் இருவரையும் அருகில் அழைத்தார். இருவரும் அவர் காலடியில் விழுந்து நமஸ்கரித்தனர். அவர்கள் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார். அவர் கை தலையில் பட்டவுடன் ஜிவ்வென்று உடலில் மின்சாரம் பாய்ந்தாற் போலிருந்தது. அப்புறம் தன் கருணை நிறைந்த கண்களால் முருகனின் ஆன்மாவைத் துளைப்பதுபோல் பார்த்தார். அந்த அமுத ஊற்றைப் பருகிய வண்ணம் சிறிது நேரம் நின்ற கந்தன் சட்டென்று நினைவுக்கு வந்தவனாக தன் கையிலி ருந்த பெட்டியை அன்னையின் காலடியில் வைத்தான். உடனே அன்னை ஏதோ கூறினார். ‘‘இந்த காணிக்கையைக் கொடுத்துத்தான் ஆகவேண்டுமா?” என்று அம்மா கேட்கிறாங்க.

“ஆமாங்க அவங்க வாங்கிக்கிட்டா எனக்கு திருப்தியா இருக்கும். காணிக்கை செலுத்தறதா நேர்ந்துகிட்டிருக்கேன்’’ என்றான் தனக்கேயுரிய கிராமீய பாணியில். உடனே அதை வாங்கிக் கொள்ள சம்மதிப்பதுபோல் தலையசைக்கவே அந்த நீல நிறப்பெட்டியை

வாங்கிக் கொண்டார் உதவியாளர். அன்னை அவரிடம் "அந்தப் பெட்டியை வாங்கிக் கொண்டு போய் பீரோவில் வைத்துப் பூட்டு" என்று சொல்லிவிட்டுக் கந்தனுக்கு விடையளித்தார்.

அரக்கு நிறச் சுங்குடிச் சேலையைப் பின் கொசுவம் வைத்துக்கட்டி முகத்தில் கஸ்தூரி மஞ்சள் மினுமினுக்க வாசலில் கோலம் போட்டு விட்டு உள்ளே வந்தாள். வேலாயி.

"ஆமாம் புள்ளே குடிசை வீட்டில இருந்த நாம இப்ப ஓட்டு வீட்டுக்கு மாறியாச்சு. கந்தல் சேலை கட்டியிருந்த நீ புதுச்சேலை உடுத்த ஆரம்பிச்சிட்டே, மூணுவேளை அரிசிச் சோறு கிடைக்குது. அம்மாவோட அருளைப் பாத்தியா?" "ஆமாம் மச்சான். மறுபடியும் அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு". "அட நான் கூட அதே தான் நெனச்சேன். நீ சரியா சொல்லிட்டே. இந்த மாச முடிவிலே அறுவடை ஆனபிறகு பார்க்கலாம். சரி அந்த ரேடியோ பெட்டியை எடு."

அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்ததற்கு அடையாளமாக கட்டியம் கூறிய அந்த சிறிய "டிரான்ஸிஸ்டரை ஆன் செய்தான். வானிலை அறிக்கை, ''வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தம் காரணமாக சென்னை, பாண்டிச்சேரி பகுதிகளில் பலத்த மழை பெய்யும். பலத்த கடற்காற்றும், சூறாவளியும் வீசும். மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கப் போக வேண்டாமென்று எச்சரிக்கப்படுகிறார்கள்" என்று அறிவித்தது.

செய்தி கேட்ட கந்தனின் முகம் லேசாக வாடியதைக் கண்ட வேலாயி, "என்ன மச்சான், திடீர்னு சோர்ந்து போயிட்டே?" என்று கேட்டாள் "இங்க புயல் அடிச்சதுன்னா அவ்வளவுதான். நம்ம பயிர் அத்தனையும் நாசம்தான்."

"அய்யோ இப்ப என்ன பண்றது?" பதறினாள் வேலாயி. "எதுக்கு பதட்டப்படறே? என்ன கவலைப்பட்டு என்ன ஆகப்போகுது? நிதான மாக இரு. எல்லாம் அம்மா பாத்துக்குவாங்க" கந்தன் சமநிலையுடன் இதைச் சொல்லிவிட்டுப் படுத்துவிட்டான். திடீரென மின்னல், இடி,



மழை சர்சர்ரென்று காற்று வீச ஆரம்பித்தது. இரவு முழுவதும் வேலாயி தூங்கவில்லை.

"இந்த மழைக்கும் காற்றுக்கும் பயிர் நிச்சயமா தாங்காது. இந்த மனுஷனைப் பாரேன், எதுக்கும் பயப்படாம நிம்மதியா தூங்கறாரு. ஏதாவது கேட்டா 'அம்மா பாத்துக்குவாங்க' என்கிறாரு" என்று அதிசயப்பட்டாள்.

இரண்டு நாள் பேயாட்டம் ஆடிவிட்டு ஓய்ந்தது மழை. தெருவிலிருந்த தண்ணீரெல்லாம் வடிய ஆரம்பித்தது. சூரியன் லேசாகத் தலை காட்டினான். நாளிதழ்களும், வானொலி, டி.வி. செய்திகளும் வெள்ளச் சேதத்தை புள்ளி விவரக் கணக்குச் சொல்லி விளம்பரப் படுத்திக் கொண்டிருந்தன. கந்தனும் வேலாயியும் தங்கள் நிலத்தின் வரம்பில் நின்று கொண்டு மழையால் நனைந்து தொய்ந்து போய் தலை சாய்ந்து கிடந்த நெற்கதிர்களை வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"என்ன மச்சான் இது? அம்மா பாத்துப்பாங்கன்னு எவ்வளவு நம்பிக்கையோட சொன்னே. இப்ப அம்மா கை விட்டுட்டாங்களே" என்று அங்கலாய்த்தாள். கந்தன் மன வேதனையுடன், "வேலாயி அந்த வார்த்தை மட்டும் சொல்லாதே. இதுவும் நல்லதுக்காகத்தான் இருக்கும். அம்மா எப்பவுமே கை விடறேதேயில்லை. நடக்கிற ஒவ்வொரு செயலுக்கும் ஏதாவது காரணம் இருக்கும்."

சாப்பாட்டுக்குக் கஷ்டம் இல்லையென்றாலும் கந்தனுக்கு மகசூலில் வரும் வரும்படி இல்லாமல் சிரமப்பட்டுத்தான் போனான். ஆனால் அவன் மனம் தளரவில்லை. ஆனால் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்றுதான் தெரியவில்லை. இப்ப பெய்த மழையினால் அடுத்த போகம் நன்றாக விளையக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் விதை நெல் வாங்கக்கூட பணமில்லாத நிலையில் என்ன செய்வது? யாரைப் போய்க் கடன் கேட்பது?

மறுநாள் காலையில் எழுந்ததும் "வேலாயி சீக்கிரம் குளிச்சிட்டு நல்ல புடவையா கட்டிக்கோ நாம பாண்டி போய் அம்மாவைப் பாத்துட்டு வரலாம்."

"என்ன மச்சான் திடீர்னு?"

"என்னமோ தோணிச்சு. கிளம்பு கிளம்பு" இருவரும் இந்த முறை தடுமாறாமல் போய்ச் சேர்ந்தனர். ஆசிரமத்தில் போன முறையை விடக் கூட்டம் அதிகமிருந்ததால் காத்திருக்க வேண்டியதாயிற்று. அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டு உள்ளே அழைக்கப்பட்டனர். என்னவெல்லாமோ கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டு வந்தவன் அம்மாவைப் பார்த்ததும் வேறு யோசனை எதுவும் தோன்றாமல் அவரையே பார்த்தவாறு நின்று விட்டான். வேலாயிதான் லேசாக அவன் தோளில் தட்டி "மச்சான் சொல்ல வந்ததை சொல்லு" என்று ஞாபகமூட்டினாள். அன்னையின் அருகிலிருந்த உதவியாளரிடம் "ஐயா இந்த முறை புயல்ல சிக்கி என் பயிரெல்லாம் அழிஞ்சு போயிடுச்சு எங்க குறையை அம்மாகிட்ட சொல்லிட்டுப் போகலாம்னு வந்தோம்" என்று சொன்னான் கந்தன். தான் ஏற்கனவே ஒருமுறை வந்து போனதை அம்மாவிடம் சொல்லலாமா என்று யோசித்தவன், வேண்டாம் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்க வேண்டாம் என்று முடிவெடுத்தான். இதற்குள் அன்னையிடம் அவன் கூறியதை மொழிபெயர்த்துச் சொன்னவுடன் அன்னை ஆங்கிலத்தில் அவரிடம் ஏதோ கூறினார்.

உடனே அவர் உள்ளே சென்றார். கந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் அம்மாவின் எதிரில் இருக்கும் ஒவ்வொரு நொடியும் விலை மதிக்க முடியாதது என்றுணர்ந்தவனாய் அம்மாவின் பாதத்தில் மானஸீகமாக நமஸ்கரித்துக் கொண்டிருந்தான். இதற்குள் உள்ளே நுழைந்தவர், கையில் ஏதோ பொருளுடன் வெளியே வந்தார். அன்னை தம் கண்களாலேயே அதைக் கந்தனிடம் கொடுக்கும்படி ஜாடை காட்டினார். அவர் கொடுத்ததை வாங்கிய கந்தன் ஸ்தம்பித்துப் போய் விட்டான். அவன் போன முறை கொடுத்த



அதே நீல நிறப்பெட்டி! "பெட்டியைத் திற" என்று அன்னை சொன்னதைப் புரிந்து கொண்ட கந்தன் அதில், தான் வைத்திருந்த அதே செய்தித் தாளின் கீழ் பத்தாயிரம் ரூபாய் பணமும் இருப்பதைப் பார்த்து திகைத்துப் போனான்.

"ஐயா இந்தப் பணத்தை அம்மா உங்ககிட்ட கொடுத்து விதை நெல் வாங்கிப் பயிரிடச் சொல்றாங்க" என்று விளக்கம் கூறினார் உதவியாளர். நெடுஞ்சாண்கிடையாக கந்தன் விழுந்து வணங்கிய விதம் பூரண சரணாகதியின் விளக்கமாக அமைந்தது.

"என்னாலே நம்பவே முடியவில்லை மச்சான். நடந்ததெல்லாம் நினைச்சா ஆச்சரியமாயிருக்கு. அம்மாவுக்கு ஏற்கனவே தெரியும் போல இருக்கு இப்படி நடக்குமின்னு". "அதை விட ஆச்சரியம் என்னன்னா, நாம போன முறை வந்து போனதை அம்மா கிட்ட சொல்லலாமா வேண்டாமான்னு யோசிச்சேன். அவங்க என்னடான்னா நாம கொடுத்த பெட்டியைக் கூட ஞாபகம் வெச்சிக்கிட்டு எடுத்துக் கொடுக்கச் சொன்னாங்க. என்னோட அறியாமையை நெனச்சா எனக்கு சிரிப்பா வருது". "இனிமே நமக்கு கவலையில்லை மச்சான்"

"இரு இரு அவசரப்படாதே வேலாயி. நமக்கு நல்ல நிலைமை வந்ததுக்கும் ஒரேயடியா நான் சந்தோசப்பட்டுடல்லை. பயிர் நாசமா போன போதும் நான் பெரிசா வருத்தப்படலே. இப்ப பழைய நிலை வந்ததுக்கும் ஒரேயடியா மகிழ்ந்திடப் போறதில்லை. காரணம் என்ன தெரியுமா? நாம இந்த ஒலகத்துக்கு வந்த போது எதைக் கொண்டு வந்தோம்? போகும்போது எதைக் கொண்டு போகப் போகிறோம்? ஒரே ஒரு பெரிய விஷயம் நாம அம்மாவைத் தெரிஞ்சுகிட்டதுதான். அவங்க மேலே இருக்கிற நம்பிக்கைதான் நமக்கிருக்கிற மூலதனம். எந்த நிலையிலும் 'அம்மா நீயே கதி' என்று சரணடைந்தவரை அவங்க கைவிடமாட்டாங்க என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. இன்னொன்னு பாத்தியா, நாம பேசற பாஷை அம்மாவுக்குப் புரியாதே, அம்மாவோட பாஷை நமக்குப் புரியாதேன்னு நினைச்சேன்.

இப்பதான் தெரியுது. இதயத்தின் ஆழத்திலிருந்து நாம பேசின எந்த பாஷையாயிருந்தாலும் அம்மா புரிஞ்சுக்குவாங்க. நாமும் அம்மாவோட பார்வையிலிருந்தே அவங்க என்ன சொல்றாங்கன்னு புரிஞ்சுக்க முடியுது” என்று ஒரு பெரிய விஷயத்தைச் சாதாரணமாக ஒரு ஞானியைப்போல் சொல்லிவிட்டு பயிர்களைப் பார்வையிட நிலத்தை நோக்கி நடந்தான். கீழ்வானத்தில் உதயமாகிக் கொண்டிருந்த சூரியனைப் பார்த்த வேலாயி அம்மாவைத் தெரிந்து கொண்ட அனைவரின் வாழ்விலும் இந்த விடிவெள்ளி முளைக்கும் என்பதைப் புரிந்து கொண்டாள்.

* * *

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கட்டுக்கடங்காத உணர்வைக் கட்டுப்படுத்தினால், உள்ளிருந்து இறைவன் எழுகிறான். அவன் பிரகிருதிக்குக் கட்டுப்படாத நிலையில் எழுவான்.

## இம்மாதத்தில் வரும் தரிசனநாள்

ஆகஸ்ட் 15 பகவானின் ஜென்மதினம்.





# பிரார்த்தனை பலிக்க வேண்டும்

விவேகாநந்தர் சிக்காகோவில் பேசும்பொழுது “இங்கு வந்தபின் என் மனத்தைப் பறிகொடுத்தேன்'' என்றார். யார் அந்த அதிர்ஷ்டக்காரப் பெண் எனக் கேட்பவர் வியந்த நிலையில் சுவாமி மேலும் பேசினார் ‘‘உங்கள் நாட்டில் **organisation** வாழ்க்கைச் செயல்முறை அற்புதமாக அமைந்துள்ளது. நான் அதனிடம் என் மனதைப் பறிகொடுத்தேன்” என்றார். அமெரிக்காவைப்பற்றி அன்னை அதையே கூறியுள்ளார். **Practical organisation**இல் அமெரிக்கர் நிபுணர் என்கிறார் அன்னை. இந்தக் கோணத்தில் அன்னையை நாம் அறிய முயல்வது பெரும்பலன் தரும். இது உயர்ந்த தத்துவம். இதை விளக்கினால், விளக்கம் சிறப்பாக இருக்கும். புரிந்தால் உன்னதமாக இருக்கும். 1920இல் ஸ்ரீ அரவிந்தர் சத்திய ஜீவன் பிறப்பான், மரணம் அழியும், உலகம் ஆண்டவனில் புனர்ஜென்மமெடுக்கும் என்று கூறியபொழுது அவருடன் இருந்த சாதகர்கள் அதை “**Advent**” வைகறை என்றனர், **Kingdom of God on Earth** புவியில் தெய்வீக வாழ்வு என்றனர், **Life Divine** என்றனர். அது ஆத்மவிளக்கம். அறிவுக்குக் கலங்கரை விளக்கம். அதுபோல் **organisation of consciousness** ஜீவியத்தின் சிறப்பு மனத்திற்கு இதமாக இருக்கும். இதைவிட என்ன வேண்டும் என்று தோன்றும். எல்லாம் புரிவதுடன் சரி. நடைமுறையில் எதுவுமிருக்காது.

தம்பி - நடைமுறைக்கு வழியில்லை?

அண்ணன் - நடைமுறைக்குண்டான வழியைப் பிறரிடம் தேடுவதை விட்டுவிட வேண்டும். அதை நம்மிடம் தேடவேண்டும். தேடினால் வழி பிறக்கும். கீழ்க்கண்ட நம் அனுபவத்தைக் கூர்ந்து யோசனை செய்வது நல்லது.

1) ‘‘மனிதன் தன்னை மையமாகக் கொண்டு செயல்படுகிறான். இறைவன் தனக்கு ஒரு கருவி என

நினைக்கிறான். அதில்லை என்றால் அந்த இறைவன் எனக்கு வேண்டாம் என்கிறான்" என்று அன்னை கூறுகிறார்.

2) நமது உலகில் பிறர் வாழ மனம் பொறுக்காது. தான் சம்பாதிப்பதைவிட பிறர் சம்பாதிப்பதை தடுப்பதையே லட்சியமாக்க கொண்டது உலகம். நாம் பிறர் வாழ முயல்கிறோம். நம்மைச் சுற்றியுள்ளவர்கள் நம்மை அழிக்க முயல்கிறார்கள்.

3) இருளடைந்தவன், ஏழை, ஒதுக்கப்பட்டவன், தாழ்த்தப்பட்டவன், ஊனமுற்றவனை உலகம் ஒதுக்குகிறது. அழிக்க முயல்கிறது. அன்னை அவர்களே மற்றவர்களையும்விட, சிறந்தவர் களையும்விடச் சிறந்தவர்கள் என்கிறார். அவர்கள் திருவுருமாற விரும்பினால் சிறந்தவர்க்கு நிகராகவும், மிச்சமாகவும் உயர்வார்கள் என்கிறார்.

4) மனிதர்களில் பெரும்பாலோர் கேட்பது என்ன? அவர்கள் வாழும் உலகம் எது? நாம் என்ன கூறுகிறோம்?

* இன்றைய உலகம் - வீடு, நட்பு உட்பட - உன் முன்னேற்றத்தை விழையவில்லை.

* உன் முன்னேற்றத்திற்கு உனக்கு வழி தெரியவில்லை. தெரிந்தால் பிரமோஷன் பெறத் தெரியும். உன் உலகம் அதற்குத் தடை. ஓரளவு முதலில் ஆதரவு தரும். அடுத்தாற்போல் எதிர்க்கும். அழிக்கும்.

* கிளார்க்கு, ஆபீசராக முடியாத உலகத்தில் அன்னை IAS ஆபீசராக வழிகாட்டுகிறார். கிளார்க் IAS வேலை உள்ளூரிலேயே வேண்டும், டிரான்ஸ்பர் கூடாது என்று நினைக்கிறார்.



* வீடும், நட்பும் உட்பட எவரும் உன் பெரு முன்னேற்றத்தை எதிர்க்கும் இவ்வுலகில் உச்சகட்ட முன்னேற்றத்திற்கு அன்னை வழிசொல்லி, உறுதுணையாக இருக்கிறார். மனிதன் தன் பங்கைச் செய்ய மறுக்கிறான். சாப்பாட்டிற்கு வழியில்லாத வனுக்குப் பெரிய விருந்திற்கு ஒருவர் பணம் கொடுத்தால், "நீங்களே சமைத்துப் போடுங்கள்" என்பதுபோல் மனிதன் பேசுகிறான். அதையும் செய்தவரை அந்த விருந்தில் அவமானப்படுத்த ஆர்வமுடையவன் மனிதன்.

* நாம் - பொதுவாக மனிதர்கள் - இவற்றை அறிவதில்லை, அறிந்தால் பொருட்படுத்துவதில்லை. உடன்பிறந்தவர், கணவன், மனைவி, பிள்ளைகள், பெற்றோர், நண்பர்கள் இம்மனநிலையிலிருப்பவரை அறிவதில்லை. அவர்கட்கு அன்னை மூலம் நல்லது வேண்டும் என நினைக்கிறோம், அது நடக்காது.

* அன்னை மூலம் நல்லது நடக்க வேண்டுமானால், அது நமக்கு நடக்கும், நமக்குமட்டும் நடக்கும், பிறர் - கெட்ட எண்ணமுள்ள பிறர் - பெறவேண்டுமென நாம் நினைக்கும்வரை அதுவும் நடக்காது. அந்த எண்ணம் தவறு. அது பலிக்காது. பலித்தால் பிறர் கெட்ட எண்ணம் வலுப்படும். அங்கு அன்னை தொடர்ந்து செயல்பட மாட்டார்.

* அவர்களைப்பற்றிய நம் எண்ணத்தை நாம் சமர்ப்பணம் செய்வது மட்டுமே முடியும். நாமாக அவர்கட்கு அன்னையை அளிக்க முடியாது.

ஸ்ரீ அரவிந்தர் இதைப் பரோபகாரம் என்கிறார். பரோபகாரம் நம் அகந்தையின் வெளிப்பாடு என்கிறார்.

தம்பி – நீங்கள் சொல்வதை எல்லாம் நானும் அறிவேன். அவர்கள் விஷயத்தில் நாம் என்ன செய்ய?

அண்ணன் – அவர்களாக வந்து உதவி – அன்னை முறையை அறிய உதவி – கேட்டால் கொடுக்கலாம்.

தம்பி – அவர்களாக வரப்போவதில்லை.

அண்ணன் – நாம் உதவ வேண்டும் என்ற கருத்தைச் சமர்ப்பணம் செய்வது மட்டுமே நமக்கு உரிமை.

தம்பி – அது சமர்ப்பணமாவதில்லை.

அண்ணன் – சமர்ப்பணமாகவில்லை எனில், அன்னை ஏற்கவில்லை எனப் பொருள். அன்னை ஏற்காததை நாம் செய்ய முற்படுவது தவறு. சமர்ப்பணமானபின் நடப்பது, அன்னையின் திருவுள்ளம். அத்துடன், பிறருக்கு உதவ முனையும்பொழுது அதன் மூலம் அவன் நம்மை அழிக்க உதவுகிறது. நம் அனுபவம் முழுவதும் அதுபோன்றது.

தம்பி – இதன் தத்துவம் என்ன?

அண்ணன் – பொதுவாக (வீட்டிற்கு வெளியில்) ego மட்டுமே முக்கியமாக இருக்கிறது. ஒவ்வொருவரும் தம் egoவைப் பாராட்டுகின்றனர். இன்று நாம் நண்பர்களாகப் பழகும் பொழுது பிறர் சொந்தவிஷயத்தில் தலையிடுவதில்லை. நட்பு தொடர்கிறது. நண்பர் முன்னேற வேண்டும் என்று நாம் சொல்வதை அவர் "என் ego வளர வேண்டும்" என்று கொள்கிறார். அதை வேறெங்கும் செயல்படுத்த முடியாது என்பதால் நம்மிடம் செயல்படுத்துகிறார். நம்மை அழிக்க முயல்கிறார். **நம் நல்லெண்ணம் அவருக்குத் தேவையில்லை. அவர் ego அவருக்கு முக்கியம்.** நாம் எத்தனைப் பேருக்கு உதவிக்குப் போயிருக்கிறோம். கிடைத்தது என்ன? தொந்தரவே.



தம்பி – இது சுயநலம் உயர்ந்தது என்றாகிறதே.

அண்ணன் – அப்படியில்லை. நம்மால் முடியாததைச் செய்து வம்பில் மாட்டிக்கொள்வது தவறு என்று கூறுகிறேன்.

தம்பி – பிறருக்கு உதவ நம்மால் முடியாது என்று கூறுகிறீர்களா?

அண்ணன் – நாமே போய் பிறருக்கு உதவமுடியாது என்கிறேன்.

தம்பி – அவர்களாக நம்மை வந்து அன்னையைப்பற்றிக் கேட்கப் போவதில்லை.

அண்ணன் – அவர்களாகக் கேட்காதவரை நாமே அந்த உதவியைச் செய்ய முயல்வது என்பது கூடாது. அது ego என்கிறார் பகவான்.

தம்பி – அந்தச் சமயத்தில் நாம் செய்யக் கூடியதென்ன?

அண்ணன் – சமர்ப்பணம்.

தம்பி – அது முடியவில்லையே.

அண்ணன் – சமர்ப்பணம் இங்கு முடியவில்லை என்றால் நம் ego முனைப்பாக இருக்கிறது என்று பொருள். அப்படியானால் அந்தக் காரியத்தைச் செய்யக்கூடாது.

தம்பி – எந்தக் காரியத்தைச் சமர்ப்பணம் செய்ய முடியவில்லையோ, அதைச் செய்வது ego வை வெளிப்படுத்துவதாகும் என்கிறீர்களா?

அண்ணன் – உலகை ego ஆள்கிறது. அது தன்னை வலுப்படுத்த முயல்கிறது. அது என் ego, உன் ego என்பதில்லை. அது ego. நாம் அன்னை உயர்ந்தவர்கள். அவர்களை உலகுக்கு அளிக்க வேண்டும் எனப் பிறரிடம் முயன்றால், பிறருக்குத் தெரிவதெல்லாம் ஒன்றுதான் தனக்கு – தம் egoவுக்கு – ஒரு வாய்ப்பு வந்துள்ளது

என்று கொள்கிறார்கள். இதுவே பஸ்மாசூரன் கதை. நம் வாழ்வில் அதற்கு விதிவிலக்கைக் காணவில்லை.

தம்பி - சற்று யோசனை செய்து பார்த்தால் கடந்த பல வருஷங்களாக வந்த அத்தனை ஆபத்துகளும் நமக்கு இப்படி வந்ததாகத் தெரிகிறது.

அண்ணன் - நாம் அன்னை வேறு, மனிதர்கள் வேறு, ஸ்தாபனம் வேறு என்பதை மறந்து எல்லாம் ஒன்றே என்று நடப்பது அறிவீனம். அன்னை அன்பரானாலும், அன்னை பேரில் ஸ்தாபனம் நடத்துபவரானாலும், அன்னையோடு வாழ்ந்தவரானாலும், அன்னையை ஏற்றுக்கொண்டதாகச் சொல்லும் பக்தர், சாதகரானாலும், அவர்கள் நடைமுறையை மட்டும் நாம் கவனித்தால் தவறு வாராது. நாம் அவர்கள் சொல்வதை முடிவாக ஏற்றுக் கொள்வது தவறு. அதனடிப்படையில் நடந்தால், அவர்கள் நம்மை அழிக்க நாமே கருவியானதாக முடிகிறது. இது ஆபத்து.

தம்பி - இப்படிப் பார்த்தால் நமக்கு வந்த அத்தனை ஆபத்திற்கும் நாமே காரணம் என்று புரிகிறது.

அண்ணன் - இது தவிர நமக்கு வாழ்வில் பிரச்சினைகள் ஏதாவது உண்டா?

* *அன்னையிடம் வந்தபின், வாழ்வில் பிரச்சினைகளே எழவில்லை, நாமே நம் அறியாமையால் எழுப்பியது தவிர வேறு பிரச்சினைகள் இல்லை என்று எனக்குத் தெளிவு.*

தொடரும்.

**Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.**

**Editor: Karmayogi**

# இந்திய சுதந்திரத்திற்கான புரட்சி

1918இல் ஒரு குஜராத் இளைஞர் ஸ்ரீ அரவிந்தரைத் தரிசித்தார். 11 ஆண்டு முயன்று புரட்சிக்குழு ஒன்றை நிர்மாணித்ததாகக் கூறினார். சுதந்திரம் பெற இந்தியா ஆயுதம் தாங்கிய புரட்சியை மேற்கொள்ள வேண்டுமல்லவா? என்று ஸ்ரீ அரவிந்தரைக் கேட்டார்.

“இந்தியச் சுதந்திரத்திற்குப் புரட்சி தேவைப்படாது என்று நினைக்கிறேன்” என்றார் ஸ்ரீ அரவிந்தர். 1947இல் அவர் கூறியது உண்மையாயிற்று.

ஸ்ரீ அரவிந்தர் இந்தியா முன் 5 லட்சியங்களை அப்பொழுது வைத்தார்.

1) இந்திய விடுதலை 2) ஆசிய விடுதலை 3) சத்திய ஜீவியம் புவிக்கு வருவது 4) இந்தியா உலகத்தின் குரு 5) சத்தியஜீவன் பிறப்பது.

முதல் மூன்று இலட்சியங்கள் 1947லும், 1947 முதல் ”57 வரையும், 1956லும் நிறைவேறின.

இந்தியா உலகத்தின் குருவாக இந்தியர் தம் நாட்டின் ஆன்மீகச் சிறப்பை அறியவேண்டும். ஆயுர்வேத மருந்தானாலும், **Transcendental Meditation** ஆனாலும் நம் நாட்டு உயர்வை நாமறிய அது முதலில் அமெரிக்கரால் ஏற்கப்பட வேண்டும் என்பதே இன்றைய மனநிலை. அது மாற வேண்டும். தானே மாறாது. இன்றைய இளைஞர்கள் இந்திய ஆன்மீக உயர்வை அறிய முன்வருதல் அவசியம்.

அதைப் பல வகைகளில் சாதிக்கலாம். ஸ்ரீ அரவிந்தர் 1918இல் கூறியது 1947இல் உண்மையானது அரசியல் தீர்க்க தரிசனமன்று, ஆன்மீக உள்ளுணர்வு என்று அறியும் திறன் இந்திய ஆன்மீகப் பரம்பரையை அறிய உதவும்.

# எதற்காகப் பிரார்த்திப்பது?

அன்னையை அறிந்தவுடன் பிரார்த்தனையெல்லாம் ஒருவருக்குப் பலித்தது. நினைத்தனவெல்லாம் பலித்தன. மனம் விரும்பிய சிறு விஷயங்கள், பெரிய விஷயங்கள் அத்தனையும் கேட்டார். அன்னை தவறாமல் அளித்துவிட்டார். இனி ஒரு டிரான்ஸ்பர், வீட்டருகில் கேட்கலாம் எனத் தோன்றியது. எது கேட்டாலும் அன்னை கொடுக்கிறாரே, இன்னும் கேட்கலாம் என நினைத்தார். வீட்டிற்கும் தியானமையத்திற்கும் அருகில் உள்ள இடத்திற்கு டிரான்ஸ்பர் கேட்க நினைத்தார். மனம் நிலைப்படவில்லை. அடுத்தவரைக் கலந்தார்.

**"கேட்காமலிருக்கத் தோன்றவில்லையா உங்களுக்கு?’’**

என்று வந்த பதில் புதியதாக இருந்தது. மனதைத் தேற்றிக்கொண்டு, “டிரான்ஸ்பர் கேட்போம், எங்கு, எப்படி அன்னை முடிவு செய்கிறாரோ, அதுவே எனக்குகந்தது என நான் கொள்கிறேன்” என்று முடிவு செய்தார். டிரான்ஸ்பர் வந்தது.

1) கேட்கக்கூடிய பல இடங்களில் நல்ல இடம் அமைந்தது.

2) தன் உத்தியோகத்திற்கும் அடுத்த இருநிலையிலுள்ள ஆபீசருக்குள்ள வசதி வேறு காரணமாக அமைந்தது. தனி **cabin, A/c**யுடனும் இடம் தந்தனர்.

3) நண்பரொருவர் டிரான்ஸ்பரைப்பற்றிக் கேள்விப்பட்டு “பஸ்ஸில்தானே போக வேண்டும்? என் **scooter** சும்மாயிருக்கிறது. உபயோகப்படுத்துங்கள்’’ என்றார். அன்னையின் முடிவு நாம் கேட்பதைவிடச் சிறந்தது என்பது நல்ல மனநிலை. அதுவும் ஓர் எதிர்பார்ப்பு என்பதும் ஒரு மனநிலை.

**எதற்கும் பிரார்த்திக்காமலிருப்பதும் அதைவிட உயர்ந்த மனநிலை.**

கடமையைச் செய்வதும், அன்னையை ஆர்வமாக நினைப்பதுவுமே அம்மனநிலை.

**எதையும் கேட்பது உரிமையோடுள்ள பக்தி; எதையும் கேட்காதது கேட்க முடியாத மனநிலை.**